# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 – 26490183
9444 701953

*11/29, திருமால் நகர் விரிவாக்கம் II,*
*8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி,*
*சென்னை* – 600 056.

## பிள்ளைகளே விக்கிரகாராதனைக்கு விலகி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

1. தேவனுடைய சித்தத்தினாலே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எனக்கும், உங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு போதிக்க அவளை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்த எங்களை உண்மையும் உத்தமுமான மனிதர்கள் என எண்ணி பாஸ்டர்களாக தேவன் எங்களை நியமித்துள்ளார் எனக் கூறி வீண் பெருமை பாராட்டும் பாஸ்டர்கள் மத்தியில் இந்நாட்களில், சாத்தான் மிக்க வல்லமையாக கிரியை செய்து, தந்திரமாக அவர்களையும், அவர்களைச் சார்ந்த கூட்டத்தினரையும் ஏமாற்றி, ஹாஃப்மேன் வரைந்த **இயேசு 33** (அதாவது இயேசு தம்முடைய 33 வது வயதில் இவ்வாறாக இருந்தார் என்ற படம்) என்ற படத்தின் மூலமாக அவர்களை விக்கிரகாராதனைக்குள் வழிநடத்தி வருகிறான்.



3. இந்நாட்களில் இந்த **இயேசு 33** படமானது அச்சிடப்பட்டு ஒரு விலைக்காகவும், இலவசமாகவும் விநியோகம் செய்யப்பட்டு மக்களை இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள சில பெரிய புள்ளிகள் மோசம் போக்கி வருகிறார்கள். அதாவது இயேசு தம்முடைய 33வது வயதில் இவ்வாறாக இருந்தார். இவர் தான் உங்கள் தேவன். இது அவருடைய உருவப்படம் எனக் கூறி தாங்கள் மோசம் போவதோடு மட்டும் அல்ல பிறரையும் மோசம் போக்கி விக்கிரகாராதனைக்குள் வழி நடத்தி வருகிறார்கள். அதோடு மட்டும் அல்ல இந்த படத்தை நன்கு பிரேம் செய்து தன் சபையார் அனைவருக்கும் தன்னை பாஸ்டர் என அழைத்துக் கொள்ளும் திரு. ஜான் ஐசக் அவர்கள் பரிசாக கொடுத்ததை என் கண்களால் கண்டேன். அன்றைய தினத்தில் சபையில் இருந்த நானும் சகோ. அந்தோனி அமல்ராஜ் மட்டுமே அதை வாங்க மறுத்து விட்டோம்.

4. அடுத்து அப்போஸ்தலன், சுவிசேஷகன், பாஸ்டர் என பல பதவிகளால் தன்னை அவ்வப்போது அழைத்துக் கொள்ளும் மும்பை சகோ. டேனியேல் கிறிஸ்டியான் அவர்கள் இந்த படத்தை ஒரு விலைக்கு விற்று அதன் மூலம் பணம் சம்பாதித்ததையும் அறிய வந்தேன். மூன்றாவதாக சென்னையிலுள்ள ஒரு பெரிய பணக்கார புள்ளி இந்த படத்தை பெருமளவில் பிரிண்ட் செய்து இலவசமாக மக்களுக்கு விநியோகம் செய்ததாகவும், ஆனாலும் சிலர் இவைகளை இலவசமாக அவரிடமிருந்து பெற்று அதை ஒரு விலைக்கு விற்று பணம் சம்பாதித்ததாகவும் செய்தியானது எனது காதுகளில் விழாமல் இல்லை.





5. இங்கு நீங்கள் காண்கிற படங்களை போன்ற பல படங்களை ஸ்தாபன சபை மக்கள் இயேசு கிறிஸ்து இவ்வாறாக பூமியில் சஞ்சரித்த நாட்களில் இருந்தார் எனக்கூறி இதற்கு பிரேம் போட்டு, தங்கள் வீடு முகப்பில் தொங்க விட்டு, இதற்கு மாலை போட்டு, மெழுகுவர்த்தி, மற்றும் ஊதுவர்த்தி கொளுத்தி கனத்தையும், மரியாதையும் செலுத்தி, இந்தப் படத்தை நாங்கள் தொழுது கொள்ளவில்லை, மாறாக இயேசு கிறிஸ்துவின் ஞாபகார்த்தமாக இதை வைத்துள்ளோம் என கூறுகிறார்கள். இப்பொழுது ஸ்தாபன சபை மக்களுக்கும், இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இருவரும் ஒரு ஓவியன் தன் கற்பனையினால் வரைந்த படத்தை இயேசு தன் வாலிப பிராயத்தில் இவ்வாறாக இருந்தார் என ஒரு குருட்டு நம்பிக்கையில், அந்த படத்திற்கு கனத்தையும், மரியாதையும் செலுத்தி வருகிறார்கள். ஆக இந்த இரு கூட்டத்தாரும் தங்களுக்குக்கென்று இரு ஓவியர்கள் வரைந்த படத்தை வைத்துக்கொண்டு அதற்கு ஆராதனைக்குரியவருடைய கனத்தையும், மகிமையையும் செலுத்தி வருகிறார்கள்.

அப்படியானால் இந்த இரு கூட்டத்தாரும் யார்? இவர்கள் இருவரும் விக்கிரகாராதனைக்காரர்களே. இரு கூட்டத்தாரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளின் ரகத்தை சேர்ந்தவர்கள் தான்.

**6.** காணப்படுகிற அல்லது காணப்படாத ஒன்றின் உருவத்தை அது மனித உருவமாக இருக்கலாம் அல்லது வானத்தில் காணப்பட்ட ஒரு அடையாளமாக அல்லது அந்த அடையாளத்தின் சாயலாக இருக்கலாம், அதை தன் கைவேலையால் உருவாக்கி அதை தெய்வமாக தொழுது கொள்வதே விக்கிரகாராதனை. கிறிஸ்தவர்கள் மத்தியில் விக்கிரகாராதனை மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கொப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். யாத்.20:4,5. பாருங்கள், அது வானத்தில் காணப்படுகிறதான ஒன்றிற்கு ஒப்பான ஒரு சொரூபமாக இருந்தாலும் சரி, அது பூமியிலே காணப்படுகிறதான ஒன்றிற்கு ஒப்பான ஒரு சொரூபமாக இருந்தாலும் சரி, அது பூமியின் கீழ் தண்ணீரில் காணப்படுகிறதான ஒன்றிற்கு ஒப்பான ஒரு சொரூபமாக இருந்தாலும் அதை பணிந்து கொள்ளக்கூடாது. பணிந்து கொள்வது ஒரு விக்கிரகாராதனை. விக்கிரகாராதனைக்காரனான சகோதரனோடு கலந்திருக்கக்கூடாது. 1கொரி.5:11. இவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. 1கொரி. 6:9. இவர்கள் பரிசுத்த நகரத்துக்கு புறம்பானவர்கள். வெளி. 22:15.

**7.** ஒன்றின் உருவத்தை (Image) சிலை வடிவத்தில் மரகட்டையால் செதுக்கி அல்லது கற்களினால் செதுக்கி (Graven image) அல்லது உலோகத்தை உருக்கி அதினால் வார்ப்பிக்கப்பட்ட ஒரு சொரூபத்தை உண்டாக்கி (Molten image) அல்லது ஒரு உருவத்தை வரைந்து (Painted Image) அதற்கு தெய்வீக கனத்தை கொடுத்து அதை தெய்வமாக உள்ளத்தில் எண்ணி ஆராதனை செய்வது விக்கிரகாராதனை(Idolatry) ஆகும். உருவக வழிபாடு ஆகும். இப்படிப்பட்ட வழிபாடு தேவனுடைய வார்த்தையில் மிக மிக கண்டணத்துக்குரியதாகும். நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும், சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்கு சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும் பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக. லேவி. 26:1. யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார். உபா. 16:22.

**8.** பாருங்கள் ஒரு ஓவியர் மனுஷ சாயலாக, மனுஷரூபத்தின் படி (ஏசா 44:13) ஒரு சித்திரத்தை வரைகிறார். அதைக் கொண்டு இயேசு தமது 33 வது வயதில் இப்படித்தான் இருந்தார் என பறை சாற்றுகிறார். மக்கள் அதற்கு செவிகொடுத்து, தங்கள் உள்ளத்தில் அந்த படத்திற்கு தெய்வத்துக்குரிய மதிப்பும், மரியாதையும், மகிமையையும், கனத்தையும், கொடுத்து அதற்கு முன்னின்று அதை வணங்குகிறார்கள். அதைப்பணிந்து கொள்கிறார்கள். அதன் முன் நின்று மன்றாடுகிறார்கள். அதன் முன் நின்று பிரார்த்தனை செய்கிறார்கள். இதுவும் விக்கிரகாராதனையே.

**9.** இதற்கு காரணம் என்ன? இவர்கள் அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள். காணாதபடிக்கு அவர்கள் கண்களும், கேளாதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஓவியன் வரைந்த படத்தை உள்ளத்தில் தெய்வமாக நினைத்து அதை வணங்கலாமா என்ற எண்ணம் அவன் மனதில் தோன்ற வில்லை. அம்மாத்திரம் அறிவும், சொரணையும் அவனுக்கு இல்லை. அவன் மனம் வஞ்சிக்கப்பட்டதாகும். அது அவனை மோசப்படுத்தினது. ஏசாயா 44 ஆம் அதிகாரத்தை தியானியுங்கள்.

**10.** இயேசு தம்முடைய வார்த்தையை நமக்கு கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய திருஉருவத்தை நமக்கு கொடுக்கவில்லை, விட்டு செல்லவும் இல்லை. யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? ஏசா. 46:5. ஒரு ஓவியன் ஒரு படத்தை வரைந்து இது தான் இயேசு தமது 33 வயதில் இருந்த தோற்றம் என்கிறான். உடனே ஜனங்கள் அந்தப்படத்தை ஒரு கிரயத்திற்கு வாங்கி, அல்லது அதை இலவசமாக பெற்று அதை சுற்றிலும் பிரேம் போட்டு தங்கள் வீட்டு முகப்பு வாசலில் மாட்டி வைத்து, அதற்கு கனத்தையும், மகிமையையும் செலுத்தி அதைத்தொழுது கொள்ளுகிறார்கள். பிரியமானவர்களே முந்தி பூர்வ காலத்தில் நடந்ததை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் ஒரு கன்றுகுட்டியை உருவாக்கி அது தான் உங்களை எகிப்து தேசத்தின் அடிமைதனத்திலிருந்து விடுவித்து, இந்நாள் மட்டும் வழி நடத்திக் கொண்டு வருகிற தெய்வம் என்றார்கள். ஜனங்கள் அதை தொழுது கொண்டார்கள். இன்று ஒரு ஓவியன் பல வண்ணங்களை கொண்டு ஒரு சித்திரத்தை வரைந்து இது தான் உங்கள் தேவன். இவர் பூமியில் சஞ்சரித்த காலங்களில் தமது 33 வது வயதில் இப்படி தான் இருந்தார் என்கிறான். உடனே ஜனங்கள் அந்த படத்தை வாங்கி அதற்கு தெய்வத்திற்குரிய மதிப்பும், மரியாதையும் கொடுத்து அதை தொழுது கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். என்ன வஞ்சிப்பு? சாத்தானுடைய கூலி ஆட்கள் உடனே அதை சுற்றி நன்கு பிரேம் போட்டு இதோ உங்கள் ஆண்டவர் இதை உங்கள் வீட்டு முகப்பில் பத்திரமாக தொங்கவிட்டுக் கொள்ளுங்கள், இவரே உங்கள் வீட்டு தலைவர் என்கிறார்கள். ஜனங்களுக்கு அவர்கள் வாக்கு தெய்வவாக்காக இருக்கிறது. ஸ்தாபனமார்க்கம் சாத்தானுடையது. சாத்தானுடைய மார்க்கத்தை இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் என்பவர்களும் பின்பற்றுகிறார்கள். ஏனென்றால் இவர்கள் இருதயத்தில் எந்த ஒரு மனமாற்றமும் இல்லாத ஜீவியம்.

**11.** வானத்தில் காணப்படும் எந்த ஒரு அடையாளத்தைக் கொண்டும் நமக்கு ஒரு தெய்வத்தை உருவாக்கக் கூடாது. அதுவும் விக்கிரகாராதனையே. சித்திர வேலையான படங்களை நம்பி நீ தான் எங்கள் தெய்வம் என்று சொல்லி அதற்கு மகிமையை கொடுத்து, துதி செலுத்துகிறவர்கள் பின்னடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள். நான் இங்கு எழுதிய காரியங்களை குறித்து நீங்கள் ஏசாயா 42, 46வது அதிகாரங்களையும், எரேமியா 10வது அதிகாரத்தையும் தியானியுங்கள். சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்க கூடாது லேவி. 26:1. யாதொரு சித்திரத்தையும் வரைந்து அதன் முன் நிற்கக்கூடாது. அதை தொழுது கொள்ளக் கூடாது, அதன் முன் நின்று மன்றாட கூடாது. அதன் முன் நின்று அதை பணியக் கூடாது. எசே. 8:11.

**12. இந்நாட்களில் விக்கிரகாராதனை இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளோம் என்பவர்கள் மத்தியில் தலைவிரித்தாடுகிறதை காண்கிறேன். ஆதலால் இந்த செய்தித்தொகுப்பை எழுத ஆவியானவரால் தூண்டப்பட்டேன். அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் பார்வைக்கு சரியாகத்தென்பட்டதை எல்லாம் செய்து வந்தனர். அவ்விதமாகவே இந்நாட்களில் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவர்கள் ஒரு ஸ்தாபனமாக இல்லை, பரிசுத்தஆவி அவர்களை வழி நடத்துகிறது. அதே வேளையில் பரிசுத்த ஆவியின் பேரில் சாத்தானுடைய ஆவியும் அநேகரை வழிநடத்துகிறது. இதனால் தான் வஞ்சகம், குழப்பம். ஆக பரிசுத்த ஆவியின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொருவரும் தன்தன் சுயபுத்தியின் மேல் சாய்ந்து தங்கள் தங்கள் பார்வைக்கு எது**

நலமாக தோன்றுகிறதோ அதை செய்து வருகிறார்கள். **ஆனால் என் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?**




13. இங்கு காண்கிற படம் தான் **இயேசு 33** என்ற தலைப்பில் ஓவியர் ஹாஃப்மேன் வரைந்த, இயேசு தமது 33 வது வயதில் எப்படி இருந்தார் என்று சித்தரித்துக்காட்டிய படம். இந்த படத்திற்கு இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என கூறும் மேதாவிகளில் ஒருவர் **இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்று மோசேக்கு தம்முடைய நாமத்தை கூறினவருக்கு சாயலாக, ஒப்பாக, ரூபமாக, மாற்றி விட்டார். (யாத். 3: 13,14) ஆனால் இந்த **இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்பவர் யாருக்கு என்னை சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாயிருக்கும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள் என்கிறார். ஏசா. 46:5. அப்படியானால் இந்த படத்துக்கு **இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்று பெயர் சூட்டியது யார்? அது பிசாசாகத்தான் இருக்கமுடியும். **பிரன்காம் பெயரைக் கூறி கூறி பிசாசு மிகவும் தலையெடுத்து ஆடி மக்களை வஞ்சிப்பதற்கு இது ஒரு உதாரணம்.**

PRIVATE CIRCULATION

**சிங்கம் கெர்ஜிக்கிறது... ஆகவே...**
**ஏறக்குறைய அரைமணி நேர அமைதல்**

*(வெளி. 8:1, 10:1-6.)*

**இயேசு கிறிஸ்துவின்**
**இரண்டாம் வருகை**
**குறித்த தான**
**வெளிப்பாடுகள்**

வரிசையில் பாகம் 1, 2.
உள்ளே...



*வெளி. 10:1*

14. எனக்கு 01.09.2006 அன்று ராஜாவிடமிருந்து வந்த ஒரு பிரைவேட் சர்குலேஷனுக்கு **சிங்கம் கெர்ஜிக்கிறது.. ஆகவே.. ஏறக்குறைய அரைமணி நேர அமைதல்** (வெளி. 8:1, 10:1–6) தலைப்புக் கொடுத்து அங்கு இயேசு 33 படத்தை பிரசுரித்து அதற்கு கீழ் வெளி.10:1 என்று எழுதியிருந்தது. அதைத் தான் நீங்கள் இங்கு காண்கிறீர்கள்.**அதாவது இந்த இயேசு 33 படம் தான் யோவான் வானத்திலிருந்து இறங்கி வரக்கண்ட பலமுள்ள வேறொரு தூதன் எனக் கூறப்பட்டுள்ளது.** ஆக ஓவியர் ஹாஃப்மேன் **இயேசு 33** படத்தை வரைந்து, இது இயேசு தமது 33 வது வயதில் பூமியில் இவ்வாறு இருந்தார் என்கிறார். மற்றொருவர் இந்த **இயேசு – இருக்கிறவராகவே இருக்கிறேன்** (யாத் 3:14) என்பவர் என்கிறார். அடுத்த நபர் இந்த **இயேசு 33** வெளி.10:1–ல் கூறப்பட்டுள்ள பலமுள்ள வேறொரு தூதன் என்கிறார். இப்படியாக பிசாசு தன் ஊழியக்காரர்களால் தேவனுடைய பிள்ளைகளை இந்த ஹாஃப்மேன் வரைந்த இயேசு 33 படத்தை கொண்டு வஞ்சித்து வருகிறான். இன்னும் சகோ. பிரன்காம் பெயரைக் கொண்டு, பிரன்காம் இப்படி கூறியிருக்கிறார், அப்படி கூறியிருக்கிறார் எனக் கூறி நாளுக்கு நாள், ஆளுக்கொரு உபதேசம் கொண்டு வந்து விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். இப்படியாக சாத்தான் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்களை விசுவாசத்தை விட்டு விலகச் செய்கிறான். பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். ஆம் சாத்தான் கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக தன் ஊழியக்காரர்களைக் கொண்டு கிரியை நடப்பிப்பான். ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம். ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை சாத்தான் ஒருக்காலும் வஞ்சிக்க முடியாது.



15. அடுத்து பிசாசானவனின் மற்றொரு வஞ்சகத்தையும் இங்கு எழுதுகிறேன். வேலூர் தாமஸ் என்பவர் அவர் சேவிக்கும் கிறிஸ்து பிரன்காமின் பிறந்த நாள் ஆராதனையை **6.04.1990 – ல்** கொண்டாடி **இதோ மணவாளன் கிறிஸ்து பிரன்காம் வருகிறார்** என்று பறை சாற்றி அவருக்கு பிறந்த நாள் கேக் வெட்டி, மெழுகுவர்த்தி ஏற்றி ஆராதித்ததை இங்கு உள்ள படத்தில் காண்கிறீர்கள். இந்த அவலட்சணமான காட்சிக்கு சாட்சியாக **அக்கினி ஸ்தம்பம்** சாட்சி கொடுத்தது எனக்கூறி இந்தப் படத்தை வெளியிட்டு **அக்கினி ஸ்தம்பம்** பெயரில் இவர் மக்களை வஞ்சித்தார். வடநாட்டில் **அக்கினி ஸ்தம்பம்** பெயரில் பாஸ்டர். டேனியேல் கிறிஸ்டியான் மக்களை வஞ்சித்தார். இரண்டுமே ஒரே குட்டையில் ஊறின மட்டைகள் தான்.



16. கடந்த செய்தித்தொகுப்பு ஒன்றில் பாஸ்டர். டேனியேல் கிறிஸ்டியான் அவர்களுடைய ஆதரவாளர் ஒருவருடைய அடக்க ஆராதனையில் ஜெபித்த போது அங்கு **அக்கினி ஸ்தம்பம்** இறங்கி நின்றதாக படம் பிடித்து வெளியிட்டதைச் சுட்டிக்காட்டி இருந்தேன். அதே படத்தை இங்கு மீண்டும் பிரசுரித்துள்ளேன். இதற்கு சென்னை மாநகரில் உள்ள இவரை ஆதரிக்கும் ஒரு ஊழியக்காரர் ஒருவர் கூறியதாக நான் கேள்விப்பட்டது; இந்த பிரேத அடக்க ஆராதனையில் **அக்கினி ஸ்தம்பம்** இறங்கி, மரித்த சகோதரர் நிச்சயமாக மரித்தோர் உயிர்த்தெழுதலில் அதாவது முதலாம் உயிர்த்தெழுதலில் கிறிஸ்துவின் மணவாட்டியாக எழுந்திருப்பார் என சாட்சிக் கொடுத்து சென்றுள்ளது எனக் கூறினாராம். இப்படிப்பட்ட குருடர்கள் தான் இந்நாட்களில் இக்காலத்திற்குரிய செய்தியில், ஊழியர்கள் என்ற பெயரில் அதிகம் அதிகம். ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.



17. அடுத்து பெரவலூர் பெரியவர், நான் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவர்கள் மத்தியில் ஒரு பெரிய சபை தலைவன் அல்லவா! ஆதலால் என்னுடைய பாணியே தனி! நான் சகோதரர் பிரன்காம் என்ன கூறினாரோ, செய்தாரோ அதை அப்படியே கூறுவேன், செய்வேன், (என்னைக் கண்டவன் சகோ. பிரன்காமை கண்டான்) என்கிறார். நானும் சூளைமேட்டாரும் ஐக்கியமாக இருந்த காலத்தில் அவர் என்னை நோக்கி பெரவலூர் பாஸ்டர் வீடு முகப்பு ஹாலை பார்த்திருக்கிறீர்களா என்றார். நான் அவர் வீடு செல்லும் போது அங்கு தான் உட்கார்ந்திருப்பேன் என்றேன். அங்கு விநோதமான படம் ஒன்று உண்டு. அதன் நகலை உங்களுக்கு தருகிறேன் என்று கூறி கொடுத்தார். இது காரியமாக பெரியவரிடம் பேச இருந்தேன். அதற்குள் எங்களுக்குள் லடாய்.

18. இவர் வெளி. முதலாம் அதிகாரம் 12–20 வசனங்களில் ஏழு குத்து விளக்குகளின் மத்தியில் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் எப்படி காட்சி அளித்தார் என சாட்சி கூற ஒரு படத்தை நன்கு பிரேம் பண்ணி தொங்க விட்டுள்ளார். அதுதான் நான் இங்கு பிரசுரித்துள்ள படம். இப்படிதான் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் யோவானுக்கு காட்சி அளித்தார் என இவர் சாட்சி கூறுகிறார். இது என்ன வெட்கக்கேடு?

19. பிரியமானவர்களே இவ்வாறாகத்தான் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள, விசேஷமாக அதிலும் சென்னை வாழ் பெரியவர்களின் காரியங்கள் எல்லாம். ஆவிக்குரியவர்களே, இந்த பெரியவர்கள் (1. பாஸ்டர் ஐசக் வசந்த குமார், 2. பாஸ்டர். சாமுவேல் வளசரவாக்கம், 3. மணவாட்டி கூடாரம்) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை வழி நடத்த முடியும் என நினைக்கிறீர்களா? ஒருக்காலும் முடியாது! ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம். பத்துலட்சத்தில் ஒன்று என்ற திருஷ்டாந்தம். நீ இந்த திருஷ்டாந்தத்தில் இல்லை என்றால் கிறிஸ்துவின் மணவாட்டி அல்ல. மாறாக, உன் பாஸ்டரின் மணவாட்டியாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால் உங்கள் பாஸ்டர் உங்களைப்பார்த்து நான் உங்கள் ஆவிக்குரிய புருஷன் என்கிறாரே! இப்படிக்கூற முதலில் இவர்கள் யோக்கியதை தான் என்ன? மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி கூறுகிறான். சூரியனுக்கு கீழே செய்யப்படுகிற காரியங்கள் எல்லாம் கவனித்துப்பார்த்தேன். இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. கோணலானதை நேராக்கக் கூடாது எனவும் அந்த பிரசங்கி கூறுகிறான். **உங்களையும் நேராக்கக்கூடாது. உங்கள் பாஸ்டரையும் நேராக்கக்கூடாது. பாஸ்டரைப் போல் தான் விசுவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என இக்காலத்திற்குரிய செய்தியும் கூறுகிறது.**

20. ஹாஃப்மேன் வரைந்த **இயேசு 33** என்ற படத்தை தொழுதுகொள்ள, ஆராதனை செய்ய தங்கள் வீடுகளில் அதை வைத்து அதற்கு ஒரு தனிப்பட்ட கனத்தை செலுத்த மக்கள் ஒரு மூடபக்தியுள்ளவர்களாகி விட்டார்கள். பாருங்கள் **இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்துதல்** பாகம்–1, பத்மூ தீவு தரிசனம், பக்கம் 142, பத்தி 103, பழைய பதிப்பு இது குறித்து என்ன கூறுகிறது? ஒரு வழியானது, சாலையானது போடப்படுகிறது. ஒரு நல்ல சாலையானது உருவாக்கப்படுகிறது. அச்சாலையின் உயர்ந்த பாகமானது அதன் நடுவில் தான் உள்ளது. ஏனெனில் அது எல்லா குப்பைக் கூளங்களும் கழுவப்பட்டு சாலையின் இரு ஓரங்களுக்கும் போய்விடும்படி செய்து விடுகிறது. அது மனிதன் உண்மையிலேயே கிறிஸ்துவண்டை வருகையில், அவன் தனது கண்கள் கிறிஸ்துவில் மாத்திரம் மையம் கொள்ளும்படி பார்த்துக் கொள்ளுகிறான். அவன் சற்று உணர்ச்சி வசப்பட்டவனாக இருந்தால், அவன் ஒரு மூடபக்தியுள்ளவனாகி விடுகிறான். அவனோ சற்று குளிர்ந்து போன நிலையில் இருப்பானென்றால் சாலையின் இன்னொரு ஓரத்திற்கு போய் விடுவான்... அவனது லௌகிக ஞானம் பாருங்கள், ஆனால் பிரதான காரியமானது சாலையின் நடுமையத்தில் உள்ளது.

21. இந்நாட்களில் நமது மக்கள் மத்தியில் உள்ள காரியம் இது தான். நீங்கள் இக்காலத்திற்குரிய செய்தியை தியானிக்கும் போது உங்கள் கண்கள் கிறிஸ்துவின் மீது, செய்தியின் மீது மையம் கொண்டிருக்க வேண்டும். இதை விட்டு விட்டு செய்தியை சுமந்து வந்த செய்தியாளன் மீது உங்கள் கண்கள் மையம் கொண்டிருக்கிறது. இதனால் தான் செய்தியை கொண்டு வந்த தூதனை **கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து** என அழைக்கலாயினர். மேலும் இவர்கள் தங்கள் வீட்டு முகப்பில் அந்த படத்தை **இயேசு 33** தொங்க விட்டு இருக்கிறார்கள். அதற்கு கனத்தைச் செலுத்துகிறார்கள். இந்தக் காலத்தில் சகோ.பிரன்காமை நாங்கள் பின்பற்றுகிறோம் என்கிறார்கள். நாங்கள் எங்கள் வீட்டு முகப்பில் தொங்கவிட்டு அதற்கு கனத்தையும், மரியாதையும் செலுத்துகிறோம். ஆனால் நாங்கள் அதை ஆராதிக்கவில்லை, தொழுது கொள்ளவில்லை என மழுப்புகிறார்கள். மேலும் வெளிப்படுத்தின விஷேஷத்தை யோவானுக்கு கொடுத்ததே சகோ.பிரன்காம் தான். இவர் தான் கிறிஸ்துவின் தூதன் என்று அழைக்கும் அளவிற்கும் சென்றுவிட்டார்கள். மேலும் தேவனுடைய இராஜ்யத்திலே கிறிஸ்துவின் வலது பாரிசத்தில் அப்போஸ்தலனாகிய பவுலும், இடது பாரிசத்தில் சகோ. பிரன்காம் என காலத்துக்கு முன்பே ஒன்றை நிதானிக்கக் கூடியவர்களாகிவிட்டார்கள். பாருங்கள்! இவர்கள் அனைவரும் மூடப்பக்திக்குரியவர்களாகி விட்டார்கள். காரணம், இவர்கள் செய்தியில் கண்ட உணர்ச்சி வசம் தான். பாருங்கள்! இதெல்லாம் லௌகிக ஞானம். பரத்திலிருந்து வராத ஞானம்.

22. மற்றதொரு லௌகிக ஞானத்தைப்பாருங்கள். வேதாகமத்தில் இரகசியங்கள் வெளிப்படுத்தப்படாமல் மறைபொருளாக உள்ளன. ஆனால் இக்காலத்திற்குரிய செய்தியில் அந்த இரகசியங்கள் திறக்கப்பட்டுவிட்டன. ஆதலால் இனி வேதாகமம் நமக்கு தேவையில்லை. அதை தியானிக்க வேண்டிய அவசியமில்லை. இக்காலத்திற்குரிய செய்தியை மட்டும் தியானித்தாலே போதும். இது என்ன? இதுவும் பிசாசு தான். இது உங்கள் பாஸ்டருடைய லௌகிக ஞானம். அவர் கள்ளகபடமுள்ள வேலையாள்.

23. பாருங்கள், சகோ.பிரன்காம் திருமணம் நடத்தி வைக்கும் பொழுது அவருடைய நாட்டு கலாச்சாரத்தின்படி மணமகன், மணமகள் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள்ள அழைக்கிறார். நமது பெரவலூர் பெரியவர் நானும் திருமணம் நடத்தி வைக்கும்பொழுது அப்படியே நம் மணமக்களை அழைப்பேன் என்கிறார். இது என்ன? இதுவும் அதே லௌகிக ஞானம் தான். அதே பிசாசு.

24. நீ கையில் மோதிரம் போட்டிருந்தால், நீ கழுத்தில் தாலிக்கொடி போட்டிருந்தால், அல்லது ஏதாவது ஒரு செயின் போட்டிருந்தால், உன் காதில் கம்மல் போட்டிருந்தால் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்க மாட்டேன். வளசரவாக்கம் பாஸ்டர்.சாமுவேலின் இந்த ஞானம் பேய்த்தனத்துக்கடுத்தது ஆகும். இந்நாட்களில் தமிழ் நாட்டில் தேவனுடைய சபையை பாழாக்கி வருவதில் இவருக்கும் பெரிய பங்கு உண்டு.

25. வேதவாக்கியங்களில் **இயேசு 33** படத்துக்கு கனத்தை செலுத்த, அதற்கு முன் நின்று மன்றாட, ஜெபிக்க, அதை ஆராதிக்க, தொழுது கொள்ள எங்கும் ஆதாரங்கள் எதுவும் இல்லை. மாறாக அவ்வாறு செய்வது விக்கிரகாராதனை ஆகும். தேவனைத் தவிர வேறு எதற்கும் அது படமாக இருந்தாலும் சரி, கற்சிலையாக இருந்தாலும் சரி, செதுக்கப்பட்ட மரக்கட்டையாக இருந்தாலும் சரி, வார்ப்பிக்கப்பட்ட சிலையாக இருந்தாலும் சரி அதை தேவனுக்கு சமமாக, சாயலாக, ரூபமாக, ஒப்பனையாக கொண்டு கனத்தை செலுத்துவோமாகில் அது விக்கிரகாராதனையேயன்றி வேறில்லை. ஆதலால் ஒரு ஓவியன் வரைந்த **இயேசு 33** படத்துக்கு கனத்தையும், மரியாதையையும் செலுத்துவது 100க்கு 100 சதவீதம் விக்கிரகாராதனையே. அது வேதவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டது அல்ல.

26. என்னைப்பொறுத்த வரையில், செயல்படும் அனைத்துமே இந்த வேதாகமத்தில் இருந்து வெளிப்பட வேண்டும். இல்லையென்றால் அது இல்லை. அது வேதாகமத்தில் இருந்து தான் வர வேண்டும். அது வேதாகமத்தைக் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஓரிடத்தில் மட்டுமல்ல, அது வேதாகமம் நெடுக, அது வந்து கொண்டிருக்கவே வேண்டும். நான் அதை நம்ப வேண்டும். அது வேதத்தோடு தொடர்புடையதாக இல்லையென்றால் அதை நான் நம்பமாட்டேன். ஏனென்றால் பவுல் வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிஷேசத்தை உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கிறான் என்று கூறுகிறான். ஆதலால் நான் வேதாகமத்தை விசுவாசிக்கிறேன். நான் மேற்கண்ட பகுதியை How the Angel came to me. And His commission – Inside Life 17.01.1955 Foot Prints page 69, Para 4 லிருந்து எடுத்து எழுதியுள்ளேன். இதை மொழி பெயர்த்து கொடுத்தது சகோ. ரூபன் மாணிக்கராஜ் குடும்பத்தினர். அவர்களுக்கு எனது நன்றி!

27. ஏழு தூதர்களால் உண்டான மேகவளையம் தலைக்கல் வருகை அல்ல, அது கிறிஸ்துவினுடைய வருகையும் அல்ல. அது பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்த காட்சியும் அல்ல என்பதை இக்காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு உங்களுக்கு நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன். இதற்காக நான் பல செய்திகளிலிருந்து எடுத்த எடுத்துக்காட்டுகளை தியானித்து, நீங்கள் தலைக்கல் வந்துவிட்டது என்ற விசுவாசத்தில் இருந்தீர்களானால் உங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

28. **தரிசனம்:** சகோ. பிரன்காம் டிசம்பர் 23, 1962ல் **வார்த்தையின் நிமித்தம் வரும் நிந்தை** என்ற செய்தியைப் பிரசங்கித்தார். அதில் தான் கண்ட ஒரு தரிசனத்தைப் பற்றிக் கூறுகிறார். பின் வரும் பகுதியை நான் இந்த செய்தியின் பக்கம் 8, முதல் பத்தி முதல் பக்கம் 10, முதல் பத்தி முடியும் வரையும்; பக்கம் 13 பத்தி 1,2; பக்கம் 14, பத்தி 4 வரை எடுத்துள்ளேன். என் வாழ்க்கையில் அநேக காரியங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இது போன்ற ஒன்று நிகழ்ந்ததில்லை. நான் நினைவற்ற நிலையை (trance) அடைந்தேன். அதன் அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒன்று என் வாழ்க்கையில் நடந்ததேயில்லை. ஆனால் எனக்கு முன்பாக, அது ஒரு தரிசனம் போல் காணப்பட்டது. அந்த தரிசனத்தில் நானும் இருந்தேன். ஆனால் நான் என் மகன் ஜோசப்புடன் பேசிக் கொண்டிருந்ததை உணர்ந்தேன்.

29. நான் மேலே பார்த்தபோது, கூர்நுனிக்கோபுர வடிவில் அரை அங்குலம் நீளமுள்ள சிறு பறவைகள் எனக்கு முன் இருக்கக் கண்டேன். அவை மரக்கிளைகளில் உட்கார்ந்து கொண்டிருந்தன. மேல் கிளையில் மூன்று அல்லது நான்கு பறவைகள் இருந்தன, அடுத்த கிளையில் எட்டு அல்லது பத்து பறவைகள் இருந்தன. கீழ் கிளையில் பதினைந்து அல்லது இருபது பறவைகள் இருந்தன. அவை சிறு போர் வீரர்கள். ஏனெனில் அவைகளின் சிறகுகள் உதிர்ந்திருந்தன. அவைகள் என்னிடம் ஏதோ கூற முயன்றது போல் தோன்றினது.

30. நான் மேற்கு பாகத்தில் இருந்தேன் (அது அரிசோனாவிலுள்ள டூசானைப் போல் காணப்பட்டது). பறவைகள் கிழக்கு திசையை நோக்கிக் கொண்டிருந்தன. நான் உன்னிப்பாகக் கேட்டேன். அவைகள் என்னிடம் ஏதோ கூற முயன்றது போலத் தோன்றினது. அவைகளின் சிறகுகள் உதிர்ந்திருந்தன. அவை யுத்தத்தில் காயப்பட்டிருந்தன.

31. திடீரென்று ஒரு பறவை இப்படி குதித்து மற்றொரு பறவையின் இடத்தை எடுத்துக் கொள்ளத் தொடங்கினது. அப்பொழுது அவை வேகமாக அவ்விடத்தை விட்டு கிழக்கு நோக்கிப் பறந்தன. அவை அப்படி செய்த போது, அவைகளிலிருந்து புறாக்களைப் போன்ற பெரிய பறவைகள் கூர்மையான சிறகுகள் உடையனவைகளாய் தோன்றின. அவை கூட்டமாக வந்து, அந்தச் சிறு பறவைகளைக் காட்டிலும் மிக வேகமாக கிழக்கு நோக்கி பறந்தன.

32. நான் அப்பொழுதும் என்.... என்னுடைய இரு உள்ளுணர்வுகளும் (consciences) ஒன்றாகவே பணிபுரிந்தன. நான் அங்கு நின்று கொண்டிருப்பதை அறிந்தேன். அதே சமயத்தில் நான் வேறெங்கோ உள்ளதாக அறிந்தேன். **இது ஒரு தரிசனம்.** இதன் அர்த்தம் என்னவென்று நான் அறிய வேண்டும் என்று எண்ணினேன். இரண்டாவது கூட்டம் பறவைகள் தோன்றினவுடனே, நான் மேற்குத் திசையை நோக்கினேன். அப்பொழுது என் வாழ்க்கையின் நான் கண்டிராத மிக வல்லமையுள்ள **ஐந்து தூதர்கள்** கூர்நுனிக்கோபுர வடிவில் – ஒவ்வொரு பக்கம் இரண்டு பேரும், ஒருவர் மேலுமாக – பயங்கர வேகத்தில் பறந்து வந்தனர். அப்படிப்பட்ட வேகத்தை நான் கண்டதேயில்லை... அவர்கள் தலைகள் பின்பக்கம் சாய்த்தவர்களாய், கூர்மையான சிறகுகளுடன் வேகமாய் பறந்து வந்தனர்.

33. அப்பொழுது சர்வ வல்லமையுள்ள **தேவனின் வல்லமை என் மேல் விழுந்து என்னைத் தரையிலிருந்து மேலே தூக்கினது – தரையிலிருந்து வெகு தூரம் மேலே** (ஜோசப் பேசுவதை என்னால் அப்பொழுதும் கேட்க முடிந்தது) அப்பொழுது ஒலித் தடையையும் (Sound barrier) மீறினது போன்ற அவ்வளவு பெரிய சத்தம் புறப்பட்டு தெற்கு நோக்கி வெகு தூரம் சென்றது.

34. நான் தூக்கப்பட்டபோது, தூதர்கள் பயங்கர வேகத்தில் வந்து கொண்டிருந்தனர்... அவர்களை இப்பொழுதும் கூட என்னால் காண முடிகிறது. பாருங்கள், **அவர்கள் இப்படி கூர்நுனிக்கோபுர வடிவில் வேகமாக வந்து என்னைச் சூழ்ந்து**

**கொண்டனர். (நான் கனவு காணவில்லை, இல்லை, நான் இப்பொழுது உள்ளது போல் நன்றாக கண் விழித்துக் கொண்டிருந்தேன்).**

35. அவர்கள் பயங்கர வேகத்தில் வந்து கொண்டிருந்து, நான் மேலே தூக்கப்பட்ட போது, நான் எண்ணினேன்... நான் வெடி சத்தம் போன்ற சத்தத்தைக் கேட்டேன். அது ஒலி தடையையும் மீறினது போன்று சத்தம். நான் கேட்ட போது, இது ஒருக்கால் ஒருவிதமான வெடி விபத்தில் நான் கொல்லப்பட நேரிடும் என்பதைக் குறிக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் உடனே, அப்படி இருக்காது. ஏனெனில் அது வெடி விபத்தாயிருந்தால், ஜோசப்பும் அதில் அகப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நான் அங்கிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு அவன் இன்னமும் என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறான். அவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது. அதுவாயிருக்காது என்று எண்ணினேன்.

36. இதெல்லாம் தரிசனத்தில் தோன்றின சம்பவம். பாருங்கள் இது தரிசனத்தில் உண்டானது. பிறகு திடீரென்று.. **அவர்கள் என்னைச் சூழ இருப்பதை உணர்ந்தேன். அவர்களை என்னால் காணமுடியவில்லை. ஆனால் அவர்களுடைய கூர்நுனிக்கோபுர கூட்டத்திற்குள் நான் கொண்டு வரப்பட்டேன். அதாவது இந்த ஐந்து தூதர்கள் அடங்கிய கூட்டத்தின் உள்ளே. – மரணத் தூதன் ஒருவனே,** ஆனால் ஐந்து என்பது கிருபையைக் குறிக்கிறது" என்று எண்ணினேன். அப்படித்தான் நான் நினைத்தேன். பிறகு நான் **ஓ! அவர்கள் செய்தியுடன் என்னிடம் வருகின்றனர். இது என் இரண்டாம் உச்சக்கட்டம். கர்த்தரிடத்திலிருந்து அவர்கள் செய்தியை என்னிடம் கொண்டு வருகின்றனர் என்று எண்ணினவனாய்** என்னால் முடிந்தவரை "இயேசுவே! நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? என்று உரக்க சத்தமிட்டேன். அப்படி நான் செய்த போது, அது என்னை விட்டுப் போய்விட்டது.

37. அப்பொழுது முதல் என் மனநிலை சரியில்லை. நான் நேற்று பூராவும் நான் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. என் மனதை தெளிவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. தேவனுடைய மகிமையும் வல்லமையும்... அது என்னை விட்டுச் சென்ற போது, என் உடல் முழுவதும் மரத்துப்போயிருந்தது. என் கைகளை நான் தேய்த்து நோக்கினேன். என்னால் மூச்சு விட முடியவில்லையே என்று எண்ணினவனாய் இங்கும் அங்கும் நடந்தேன். இதன் அர்த்தம் என்ன, கர்த்தாவே? இதன் அர்த்தம் என்ன? என்றேன்.

38. பிறகு நான் நடப்பதை நிறுத்திக் கொண்டு, தேவனாகிய கர்த்தாவே, உமது ஊழியக்காரனுக்கு இது ஏன் நடந்ததென்று தெரியவில்லை. கர்த்தாவே, இதை எனக்குத் தெரியப்படுத்தும் என்றேன்.

39. நல்லது அப்பொழுது நான் தேவனுடைய வல்லமையைக் குறித்து உங்களிடம் கூறும்போது, அதை என்னால் விவரிக்க இயலாது. அதை விவரிக்க ஒரு வழியும் இல்லை. கூட்டங்களில் நீங்கள் பெறும் அபிஷேகம் போன்றதல்ல அது. அது கர்த்தருடைய ஆசீர்வாதம். ஆனால் இது புனிதமான... ஓ என்னே! அதை மனிதனால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது!

40. அது என்னை மிகவும் தொல்லைபடுத்திக் கொண்டிருந்தது. அது ஆசீர்வாதமல்ல, அது தொல்லை. நான் கலக்கமுற்றேன். நான் மாத்திரம் அது என்னவென்றும் அதனால் ஏற்பட்ட உணர்ச்சி என்னவென்றும் ஜனங்களிடம் ஏதாவதொரு வழியில் விவரிக்க என்னால் முடியுமானால் இங்கு உட்கார்ந்து கொண்டு களிகூர விரும்புவது போன்றதல்ல அது. அது உங்கள் ஒவ்வொரு நரம்பையும்.. அது பயத்துக்கு அப்பாற்பட்டது. அது அச்சுறுத்தலுக்கு அப்பாற்பட்டது. அது ஒருவகை பரிசுத்தமான பயபக்தி... அதை விவரிக்கவே முடியாது. என் முதுகு முழுவதும், என் முதுகெலும்பின் மேலிருந்து கீழ்வரைக்கும். என் விரல்கள் அனைத்தும் என் பாதங்கள் என் கால்விரல்கள், என் உடல் முழுவதுமே மரத்துப் போயிருந்தது. பாருங்கள் நீங்கள் இவ்வுலகத்தை விட்டு வேறெங்கோ இருந்தது போல் அந்த உணர்ச்சி என்னைப் படிப்படியாக விட்டு சென்றது. நான் கர்த்தரிடம் ஓ! தேவனே எனக்குத் தெரிவிக்க மாட்டீரோ? என்று முறையிட்டேன்.

41. அந்த வெடி சப்தம் அந்த தூதர்கள் அப்படி வேகமாக வருதல் அவர்கள் ஐந்து பேர் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டமாக வருதல் நான் இங்கு வரைந்தது போன்ற கூர்நுனிக்கோபுர வடிவில் அவர்கள் வந்தனர். அது எப்படி காணப்பட்டதென்றால்.. முதலில் அது ஒரு விதமான தூரத்தில் அது புறாக்களின் நிறத்தைப் போல் காணப்பட்டது. அவர்கள் இந்த பக்கமாக வந்தனர். அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு பேர் பிறகு ஒரு தூதன் மேலேயிருந்தார். ஆக மொத்தம் ஐந்து பேர். அவர்கள் அதிவேகமாக வந்தனர். அந்த வேகத்துடன் ஜெட் விமானத்தின் வேகத்தையோ வேறெதையுமே ஒப்பிட முடியாது.

42. அவர்களை என்னால் காணமுடிகிறது. அவர்கள் தலைகள் ஒரு விதம் பக்கவாட்டில் திருப்பப்பட்டிருந்தன, அந்த சிறகுகள் பின்பக்கம் நோக்கியிருந்தன, போருக்கு ஆயத்தமானவர்களாய் அப்படி இங்கு வந்தார்கள். வ்யூ! (சகோ. பிரன்ஹாம் அதை விவரிக்க விசில் சப்தமிடுகிறார் – ஆசி) அவர்கள் கீழே இறங்கி வந்து அவர்களுடைய அந்த கூர்நுனிக்கோபுரக் கூட்டத்துக்குள் என்னை அடக்கிக் கொண்டார்கள். நான் தரைக்கு மேல் தூக்கப்பட்டதைக் கண்டேன். நான் நினைத்தேன் ஒருக்கால்.. தூரத்தில் நான் "வூம்" என்னும் முழக்கத்தைக் கேட்டேன் – ஒலித்தடையை மீறின வேகத்துடன் செல்லும் விமானம் இடும் முழக்கம் போல். நீங்கள் அப்படிப்பட்ட சத்தத்தைக் கேட்டிருப்பீர்கள் – தூரத்து முழக்கம்.

43. அன்றொரு நாள், அண்மையில் இங்கு **எனக்குக் கிடைக்கப் பெற்ற தரிசனத்தில் என்ன நடக்கப் போகிறதென்று என்னிடம் கூறப்பட்டது.** நான் சூரியனில் நின்று கொண்டு இந்த இடத்துக்கு பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த தூதன் என்னிடம், **இரண்டாம் உச்சக்கட்டம் இனிமேல் தான் வரவேண்டும் என்பதை ஞாபகம் கொள்** என்றான். "ஒரு செய்தி கிடைக்கும்" என்று எண்ணினேன். இங்கு நான் அளித்த செய்தி ஞாபகமுள்ளதா? ஏழு சத்தங்கள் முழங்கினவைகளும், முத்திரைகளும் தேவனுடைய வார்த்தையில் எழுதியும் கூட வைக்கப்படவில்லை. அந்த "தலைக்கல்" திறக்கப்படுதல். ஞாபகமுள்ளதா? அது என்னை அந்த கூர்நுனிக்கோபுரத்துக்குள் கொண்டு சென்றது. ஜூனியர் ஜாக்சன் நீங்கள் இங்கு இருக்க நேர்ந்தால், அண்மையில் நீங்கள் எனக்கு எழுதிக் கொடுத்த அந்த சொப்பனம் – அதை இன்று காலை நான் கூறப்போவதில்லை, நீங்கள் மிகவும்..... தேவன் மிகவும் பரிபூரணமாக உங்களுக்கு அதன் அர்த்தத்தைக் கொடுக்காததனால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஏதோ ஒன்று அசைவதை நான் காண்கிறேன்.

**44.** குறிப்பு : இங்கு சகோ.பிரன்காம் ஐந்து தூதர்கள் கூர்நுனிக்கோபுரம் வடிவில் – ஒவ்வொரு பக்கம் இரண்டு பேரும், ஒருவர் மேலுமாக பறந்து வந்தனர் என்கிறார். அவர்கள் வந்து கொண்டிருந்த போது தேவனின் வல்லமை அவர் மேல் வந்து அவரை தரையிலிருந்து மேலே தூக்கினது – தரையிலிருந்து வெகுதூரம் மேலே, ஆனால் அவர் மகன் ஜோசப் பேசுகிறதை அவரால் அப்பொழுது கேட்க முடிந்தது என்கிறார். தரையிலிருந்து மேலே தூக்கப்பட்ட அவர் கூர்நுனிக்கோபுரம் வடிவில் வேகமாக வந்த தூதர்களால் சூழ்ந்துக் கொள்ளப்பட்டதை உணர்ந்தேன் என்கிறார். அவர்களை தன்னால் காணமுடிவில்லை எனவும் கூறுகிறார். அந்த ஐந்து தூதர்கள் கூட்டத்தில் மரணத்தூதன் ஒருவன் என்கிறார். பின் இயேசுவே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று உரக்கச் சத்தமிட்டதாகவும், அந்த தரிசனம் அப்பொழுது தன்னை விட்டு கலைந்ததாகவும் கூறுகிறார். பின் தரிசனத்தின் பொருள் கூறப்பட்டதாகவும் கூறுகிறார்.

**45.** மேலும் சகோ.பிரன்காம் 30.12.1962 ல் **ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?** என்ற செய்தியை பிரசங்கித்தார். அப்பொழுது சென்ற சனிக்கிழமை காலை, நேற்றைய தினத்திலிருந்து ஒரு வாரத்திற்கு முன்பு **(22.12.1962)** அதிகாலை தான் கண்ட, மேலே நான் எழுதிய தரிசனத்தை மீண்டும் இங்கு கூறுகிறார். அதை நீங்கள் மேற்கூறிய செய்தியில் பத்தி 198 முதல் 221 வரை தியானிக்கலாம். அதின் சாராம்சத்தை சுருக்கமாக நான் கீழே தருகிறேன். நீங்கள் இந்த செய்தியையும் தியானிப்பது உங்களுக்கு நலமாய் இருக்கும்.

**46.** அந்தத் தரிசனத்தில் சகோதரருடைய சிறிய மகன் ஜோசப் அவர் அருகில் இருந்ததாகவும், அவனுடன் அவர் பேசிக்கொண்டிருந்ததாகவும் தோன்றினது. முதலாவது அவர் ஒரு பெரிய புதர் ஒன்றை காண்கிறார். அந்த புதரின் மேல் ஒரு பறவைக் கூட்டம் காணப்பட்டது. அவைகள் மிக சிறிய பறவைகளாக தோற்றமளித்தன. மேல் வரிசையில் இரண்டு அல்லது மூன்று பறவைகள் இருந்தன. அதற்கடுத்த வரிசையில் ஆறு அல்லது எட்டு பறவைகள் இருந்தன. அதற்கும் அடுத்த வரிசையில் 15 அல்லது 20 பறவைகள் இருந்தன. இவைகள் கூர்நுனிக்கோபுரம் வடிவில் இறங்கி வந்தன என்கிறார். அவை அனைத்தும் கிழக்கையே நோக்கிக் கொண்டிருந்தனவாம்.

**47.** அந்த தரிசனத்தில் அவர் அரிசோனாவில் உள்ள டூஸ்ஸானில் இருந்ததாக தேவன் அவருக்கு காண்பித்தார். அவர் கண்ட சிறிய பறவைகளுக்கு பறக்க வேண்டும் என்ற எண்ணம் சடுதியாக தோன்றவே அவை கிழக்கு திசையில் பறந்து சென்றன. அவை சென்றவுடனே கூட்டமாக பெரிய பறவைகள் வந்தன. அவைகளும் வேகமாகவே கிழக்கை நோக்கி வந்துக் கொண்டிருந்தன. அப்பறவைகள் அவர் பார்வையை விட்டு அகன்றவுடன் அவர் திரும்பி மேற்கை நோக்கினார். அப்பொழுது முழு பூமியை குலுங்கப் பண்ணின ஒரு வெடிச்சத்தம் உண்டானது. அது தென்பாகத்தில், மெக்ஸிக்கோவில் இருந்து புறப்பட்டு வருவது போன்று அவருக்கு தோன்றியது. அப்பொழுது நித்தியத்திற்குள்ளிருந்து ஏதோ ஒரு கூட்டம் வருவதைக் கண்டார். முதலில் அது சிறு புள்ளிகள் போல் தென்பட்டது. மொத்தத்தில் அவை ஐந்திற்கு குறையாமல், ஏழுக்கு அதிகம் இல்லாமல் இருந்தன. இது செய்தியாளர்கள் வருவதை போல கூர்நுனிக்கோபுரம் வடிவில் இருந்தன. இது நிகழ்ந்த சமயம் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வல்லமை அவரை உயரத்தூக்கி, அந்த செய்தியாளர்களை சந்திக்க அவரை கொண்டு சென்றது.

**48.** அந்த தூதர்களை அவர் கண்களாலே கண்டார். அவர்களுடைய சிறகுகள் பின்நோக்கியே இருந்தன. ஒரு இமைப்பொழுதில் அவர்கள் நித்தியத்திலிருந்து அவரிடத்தில் வந்தடைந்தனர். அந்த தூதர்கள் பனியை போன்ற வெண்மை நிறமுடையவர்களாய் இருந்தனர். அவர்களுடைய சிறகுகள் தலையில் அமைந்திருந்தன. அவர்கள் இறங்கி வரும் போது வ்யூ! வ்யூ! என்று சீட்டி அடிக்கும் சத்தம் போல் கேட்டது. அப்பொழுது அவர் மேலே எடுக்கப்பட்டு கூர்நுனிக்கோபுரம் வடிவிலிருந்த தேவதூதர்கள் கூட்டத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார். அந்த தூதர்கள் மத்தியில் அவர் இருந்த போது, மிகவும் பயந்து உணர்ச்சிகள் அனைத்தையும் இழந்து காணப்பட்டார்.

**49.** அப்பொழுது காலை சுமார் 10 மணி இருக்கும். அப்பொழுது கர்த்தாவே, தேவனே, எனக்கு புரியவில்லை. இது எனக்கு விசித்திரமான ஒரு நாள். நான் பைத்தியம் பிடித்தவனைப் போல் இருக்கிறேன் என்றார். அன்று முதல் இது ஒரு பயங்கர நேரமாகவே இருந்து வருகிறது, என்ன சொல்வதென்றே எனக்கு தெரியவில்லை என்று கூறி முடிக்கிறார். **குறிப்பு** : முதலில் தூதர்களின் எண்ணிக்கைக் குறித்து அவர்கள் ஐந்து பேர் எனவும், அதில் ஒருவன் மரணத்தூதன் எனவும் கூறினார். இங்கு ஐந்துக்கு குறையாமல் ஏழுக்கு மிகாமல் என்கிறார். திட்டவட்டமில்லாத ஒரு எண்ணிக்கையைக் கூறுகிறார்.

**50.** **தரிசனம் நிறைவேறுதல் :** மூன்று ஆண்டுகளுக்கு முன் டக்ஸ்ஸனில் கொடுக்கப்பட்ட தரிசனத்தைக் கவனி. 5 ஆண்டுகளுக்கு முன் அந்த தெருவிலே நான் நின்று கொண்டிருக்கையில் அவர், எந்த நாளில் இந்த நகரம் அந்த வாசலின் முன் ஒரு கம்பத்தை அடித்து நிறுத்துகிறதோ அன்றைக்கு நீ மேற்கு பக்கம் திரும்பு என்றார். இங்கிருக்கும் சபையார் அந்தக்கம்பத்தை அறிவார்கள். அப்பொழுது நடப்பட்ட கம்பம். அது உண்மை. (பத்தி 151) கோயன் என்பவரும் இன்றும் சிலரும் அங்கே கம்பத்தை நாட்டின நாளிலே நான் என் மனைவியிடம் **ஏதோ ஒன்று நடக்க இருக்கிறது** என்றேன். (பத்தி 152) அது என்ன? என்று அவள் கேட்டாள். (பத்தி 153) நான் போய் என் சிறு புத்தகத்தைப்பார்த்தேன். அது அங்கே குறித்து வைக்கப்பட்டிருந்தது. **அந்த நாள் காலையில் 10 மணிக்கு நான் என் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்த போது கர்த்தரின் தூதன் வந்து டக்ஸனுக்கு போ, நீ வடகிழக்கு பக்கம் இருப்பாய். அங்கே ஏழுதூதர்கள் கூட்டமாக வருவார்கள். அவர்களுடைய வருகை உன்னைச் சுற்றிலும் உள்ள பூமியை அதிரவைக்கும் என்றான்** (பத்தி 154) அப்பொழுது அது அப்படி நடந்தது. இங்குள்ளவர்களில் எத்தனை பேருக்கு ஞாபகம் இருக்கிறது? அது நடந்த சமயம் அங்கே நின்று கொண்டிருந்த மனிதன் இன்றிரவு இந்த கூட்டத்தில் இருக்கிறான். **முழு வேதாகமத்தில் மறைக்கப்பட்ட இரகசியங்களின் ஏழு முத்திரைகளும் உடைக்கப்படும் என்றும், ஏழாம் தூதனின் செய்தியிலே வெளிப்படுத்தின விசேஷம் 10ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பவைகள் நிறைவேறும் என்றான். உங்கள் கண்கள் காண இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று** (பத்தி 155) செய்தி: **இந்த வேத வாக்கியம் இன்றைய தினம் நிறை வேறிற்று,** பத்திகள் 151–155 நாள் 9.12.1965.

**51.** கவனியுங்கள் ஏழு முத்திரைகளை குறித்து நான் பிரசங்கிக்கும் முன்பு, அது அவ்விதமாய் இருக்குமென்று நான் அறியவே இல்லை. நான் ஜெபர்சன்வில் கூடாரத்திலிருந்த போது, அவர் என்னை அரிசோனாவில் உள்ள டூக்ஸனுக்கு அனுப்பினார். அங்கு நேரிடவிருப்பது என்னவென்று அவர் எனக்கு வெளிப்படுத்தினவைகளை, நான் உங்களிடம் அறிவித்துச் சென்றேன். அது நிகழ்ந்த சமயம் அங்கிருந்த நபர் இப்பொழுது நம்மிடையே அமர்ந்து இருக்கிறார். ஏழு தூதர்கள் வருவார்கள் என்று அவர் என்னிடம் கூறினார். அவர் கூறினவாரே நிகழ்ந்தது. நான் இங்கு வரைந்து காட்டினவிதமாக கூர்நுனிக்கோபுரம் (Pyramid) வடிவில் அமைந்த **ஒளி வட்டம்** ஒன்று தென்பட்டது.

செய்தித்தாள்களும்,பத்திரிக்கைகளும்அதன் புகைப்படத்தை வெளியிட்டு இச்செய்தியை நாடு முழுவதும் பரப்பின. அரிசோனாவில் உள்ள டுக்ஸனில், இந்த ஏழு தூதர்கள் நின்ற இடத்திலிருந்து அது எழும்பி, 26 மைல் உயரம் சென்றது. அதன் அகலம் 30 மைல். நாடு முழுவதும் அது தென்பட்டது. **நாம் வாழும் நேரத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை உங்களுக்கு வெளிப்படுத்தவே அது அறிவிக்கப்பட்டதேயன்றி, மற்றபடி வேறு அல்ல, இதை தொடர்ந்து வந்த செய்தி ஏழு முத்திரைகளை திறந்து, வேதத்தில் மறைந்து கிடந்த பரம இரகசியங்களை வெளிப்படுத்தினது. இப்போதனைகளை உலகம் கடூரமாக எதிர்த்தது. அவை தவறு என்கின்றது. (காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டுகொள்ளுதல்,** பக்கம் 7, பத்தி1, நாள் 26.7.1964) **குறிப்பு:** தரிசனம் நிறைவேறினபின்பு தூதர்களின் எண்ணிக்கையை ஏழு என்கிறார்.

**52.** இங்கு நான் ஏழு தூதர்கள் சகோ. பிரன்காமை சந்தித்த விதத்தை **மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?** என்ற செய்தி கூறுவதை எடுத்து எழுதுகிறேன்.நான் திரும்பிச் சென்று, வேட்டைக்காக மலையின் மேல் சென்றேன். அங்கு சகோ. ஃபிரட்டும் நானும் ஒரு **காலை** நடந்துக் கொண்டிருந்த போது..... நான், சகோ. ஃபிரட்டும் **அதிகாலையில்** அந்த மலையின் மேல் செல்லுங்கள், நான் மற்ற மலையின் மேல் செல்லுகிறேன்..... நான் மலைக்கணவாயில் இறங்கினேன். அவை ஆழமான பிளவுகள். அப்பொழுது தான் **சூரியன் மேலே வந்து கொண்டிருந்தது.** நான் சுற்றி மலையின் மறுபக்கத்தை அடைந்தேன். நான் தீர்க்கதரிசனத்தைக் குறித்து ஒன்றுமே நினைக்கவில்லை. (பத்திகள். 135, 136).

**53.** நான் மலையின் மறுபக்கத்தில் என்னால் இயன்ற வரை வேகமாக ஓடத்தொடங்கின போது, திடீரென்று யாரோ என்னை சுட்டு விட்டார்கள் என நினைத்தேன். அப்படிப்பட்ட ஒரு வெடிசத்தத்தை நான் கேட்டதேயில்லை. அது தேசம் முழுவதையும் அசைத்தது. **அப்படி நேர்ந்தபோது, எனக்கு முன்பாக ஏழு தூதர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்.** (பத்தி 138)

**54.** நான் சகோ. ஃபிரட்டையும் மற்றவர்களையும் சற்று கழித்து சந்தித்தேன். அவர் "அது என்ன கேட்டார்". நான் **அது தான் அது** என்றேன். நீர் என்ன செய்யப் போகின்றீர்? (பத்தி 139)

**55.** வீடு திரும்பினேன். ஏனெனில் **கர்த்தர் உரைக்கின்றதாவது** : வேதாகமத்தில் இத்தனை ஆண்டுகளாக ஸ்தாபனங்களுக்கும், மற்றவர்களுக்கும் மறைக்கப்பட்டிருந்த ஏழு பரமரகசியங்களை தேவன் முத்திரைகளை திறந்து வெளிப்படுத்தப்போகிறார் என்றேன். (பத்தி 140)

**56. அந்த வட்டம் ஒரு மூடு பனியைப் போல் உயர எழும்பினது. அது அப்படிச் செய்த போது அது மலைக்குச் சென்று அது வந்த வழியாகவே மேற்குத்திசையில் வட்டமிடத் தொடங்கியது. சிறிது கழித்து, விஞ்ஞானம் அதை 30 மைல் உயரத்தில், 25 மைல் விட்டம் அளவில் கூர்நுனிக்கோபுர வடிவில் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டது. (பத்தி 141) பிரியமானவர்களே, இங்கு நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டியது அந்த ஒளி வட்டம் ஏறக்குறைய அரை மணி நேரம் வட்டமிட்டது என்பது ராஜாவின் தவறான உபதேசம் அது பல மணி நேரங்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அன்று காலை எனக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்த அதே இடத்தில், ஏழு தூதர்கள் பரலோகத்திலிருந்து இறங்கிவந்தனர். அவர்கள் சூழற்காற்றில் மேலே சென்றதை நாங்கள் கண்கூடாகக்கண்டோம். (எடுத்துக்கொள்ளப்படுதல், பத்தி 157) ஆக அந்த மேகவட்டம் பகலிலே ஆகயத்தில் வட்டமிட ஆரம்பித்தது. சூரியன் அஸ்தமனத்திற்குப்பின் சுமார் 28 நிமிடங்கள் நிலைத்து நின்றது என்பது தான் உண்மை. சாத்தான் செய்தியை தாறுமாறாக்குவதை நம்பி மோசம் போகாதீர்கள். கர்த்தருடைய கிருபையினால் நான் உங்களுக்கு அந்த அதிசய மேகவட்டத்தின் தோற்றம் அரைமணி நேரம் அமைதலுக்கு அடுத்த காரியம் அல்ல என்பதை விஞ்ஞான ஆதாரத்துடன் எனது கடந்த மே– ஆகஸ்டு 2005 இதழில் ஏழாம் முத்திரைத் தலைப்பில் உள்ள செய்தி தொகுப்பில் அதிசய மேகவளையம் தோற்றம் அரைமணி நேரமளவும் அமைதல் அல்ல என்ற சிறு தலைப்பில் படங்களுடன் விவரித்து எழுதியுள்ளேன். விஞ்ஞானமும் தேவனுடைய ஒரு காரியத்தைக் குறித்து சாட்சிக் கொடுக்கும் போது ராஜாவின் லௌகிக ஞானத்தினால் உண்டான வெளிப்பாடு நமக்கு எதற்கு?**

**57.** அன்றொரு நாள் அங்கு நின்று கொண்டு, அந்த படத்தை வலது பக்கம் திருப்பின போது, ஏழு சபையின் காலங்களில் இயேசு காணப்பட்ட விதமாக அது இருந்தது. தலையில் வெள்ளை தலைஅங்கி (Wig) அணிந்து, சகல அதிகாரமும் கொண்ட தேவனாக அவர் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார். அவரே எல்லா நித்தியத்திற்கும் பிரதானமான நீதிபதியாயிருந்து, அங்கு நின்றுக் கொண்டு, இந்த மணி நேரத்திற்க்கான செய்தியை உறுதிப்படுத்தினார். சாயங்காலத்தில் வெளிச்சம் உண்டாகும். (பத்தி 142)

**58.** இது சாயங்கால நேரம், சூரியன் அஸ்தமிக்கும் நேரம், சூரிய அஸ்தமன செய்தியின் மூலம் சரித்திரம் அஸ்தமனமாகி, தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. கோரனோடா காட்டிலுள்ள சூரிய அஸ்தமன மலையின் மேல் சாயங்காலத்தில் வெளிச்சம் உண்டாகும். அது டூஸானுக்கு 40 மைல் வடக்கில் உள்ளது. (பத்தி 146)

**59.** மரணத்தை காணமுடியாத எல்லாமே தொடர்ச்சியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது. அது நடக்கத் தொடங்கினது முதற்கொண்டு, இயேசு நம்மை பார்த்துக் கொண்டு நின்று கொண்டுள்ள புகைப்படம் வரைக்கும்; இப்பொழுது சரியாக சூரிய அஸ்தமன மலையின் மேல் சூரிய அஸ்தமன வெளிச்சம் சாயங்கால வெளிச்சம் வந்து விட்டது. தேவன் தம்மை உறுதி படுத்துகின்றார். அது என்ன? தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே என்னும் உண்மையாகும். **அந்த வெள்ளை எத்தனை பேர், நாம் வெளிப்படுத்துதல் முதலாம் அதிகாரத்தில் பேசின விதமாக அவருடைய தலையின் மேல் இருந்த தலை அங்கியை கண்டீர்கள்?** பாருங்கள், சகல அதிகாரத்தையுடைய பிரதான தேவன்! வேறே சத்தம் இல்லை. தேவத்துவம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. தூதர்களே அவருடைய தலைஅங்கி. ஆமென். (பத்தி 147) **பாருங்கள், மேகவட்டம் வெளி.10:1 ஐ பிரதிபலிக்கவில்லை. மாறாக அது வெளி.1:13,14 ஐ பிரதிபலித்தது. ஆதலால் சபைகளை குழப்பத்திற்குள்ளாக்கும் கள்ள கபடமுள்ள வேலையாள் ராஜாவிடமிருந்து உங்களை வேறு பிரித்துக்கொள்ளுங்கள். அதுவே நியாயம்.**

**60. சூரிய அஸ்தமன மலையில் நிகழ்ந்தது என்ன? தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடி எல்லாம் அதைக் குறித்து தான். கவனியுங்கள், அது வெளிப்படுத்தல் 10:1–7 முடிய வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாகும். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப் போகிற போது தேவரகசியம் நிறைவேறும்.** வெளிப்படுத்தல் 10:1–7 உரைக்கும் மறைக்கப்பட்ட இரகசியம் கடைசி சபை

காலத்துக்கு அளிக்கப்படும் கடைசி செய்தி, இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகின்றது. லூக் 17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் (பத்தி 148) பிரியமானவர்களே, **இது பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகையல்ல. மாறாக ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே தேவரகசியம் நிறைவேறுதலாகும். ராஜாவின் உபதேசம் லௌகிக ஞானம் என்று இங்கு உறுதி செய்யப்படுகிறது.**

**61.** சாயங்கால நேரத்தில் சாயங்கால வெளிச்சம் உண்டாகும் என்று பரலோகத்தின் தேவன் வாக்களித்தார். முன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த பரமரகசியம் **ஐயா, இது என்ன சமயம்?** என்பது தீர்க்கதரிசனமாக இருந்தது. இப்பொழுது அது சரித்திரமாகிவிட்டது. வாக்குத்தத்தம் நிறைவேறிவிட்டது. ஐயா, இது என்ன சமயம், இது என்ன கவர்ச்சி? **தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுதல்**, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (பத்தி **152) மலையின் மேல் உள்ள கவர்ச்சி என்ன?** பத்திகள் 135, 136, 138–142,146–148,152 நாள். 25.07.1965.

**62.** மேலும் அப்போது, அங்கே வெளியே அரிசோனாவிலே அந்த ஏழு தூதர்கள் அந்த மலையின் உச்சிக்கு கீழிறங்கி வந்ததைக் காண்கிறோம். தேசம் முழுவதிலும் பத்திரிக்கைகளும் கூட இதை பிரசுரித்தன. **இயேசுவானவர் தாமே அங்கே வானங்களிலிருந்து கீழ் நோக்கி பார்த்துக் கொண்டு வெளிப்படுத்தின விசேஷம் 10:7–ல் ஏழாம் தூதனுடைய செய்தியிலே இந்த முத்திரைகள் திறக்கப்படும், தேவனுடைய இரகசியங்கள் அறியப்படும் என்று சொல்வதைக் காண்கிறோம். (தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன.** பத்தி 320, நாள் 06.12.1964)

**63.** ஏழு சபைகளின் காலங்களில் இருந்த ஏழு தூதர்கள் யாரென்பதை வெளிப்படுத்த அவர் அப்பொழுது ஏழு தேவதூதர்களை அனுப்பினார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவதூதன் தோன்றி லூத்தர், வெஸ்லி, பெந்தெகொஸ்தேயினர் விட்டுச் சென்ற தளர்ந்த முனைகளை வெளிப்படுத்திக் கொடுத்தனர். அது மகத்தான ஷாலோம், யேகோவா, யாவேயின் முன் அடையாளமாகவும், நிழலாகவும் அமைந்தது. பாருங்கள்! நிச்சயமாக அவர் அதை ஆகாயத்தில் வைத்தார். அதை இயந்திரகண் படம் பிடித்தது **(ஷாலோம்**, பத்தி,58, நாள் **12.1.1964) குறிப்பு : தரிசனம் நடந்தேறிய சமயத்தில் சகோ. பிரன்காம் தான் தேவ வல்லமையினால் உயர தூக்கப்பட்டு, ஏழு தூதர்கள் கூட்டத்தினுள் பிரவேசித்ததாக எங்கும் கூறியதாக நான் அறிந்த வரை செய்திகளில் எங்கும் தெரியவில்லை. மாறாக ஏழு தூதர்கள் சந்தித்ததாக மட்டுமே கூறிவந்துள்ளார்.**

**64.** ஏழு தூதர்கள் இறங்கி வருவதை நான் கண்டேன். லைஃப் பத்திரிக்கை அதை 27 மைல் உயரம் 30 மைல் விட்டமுள்ள **மிதந்து கொண்டிருக்கும் மேகமாக வெளியிட்டது.** ஃபிரட் சாத்மேனும், பின்னால் அமர்ந்துள்ள ஜூன் நார்மேனும், மலையின் மேல் அந்த தூதர்கள் தோன்றின போது அங்கு இருந்தார்கள் அல்லவா! அநேக மைல்கள் சுற்றிலும் அது மலையை குலுக்கச் செய்தது. அங்கு ஏழு தூதர்கள் (கையில் வெள்ளி பட்டயத்துடன்) என்னிடம் **நீ வீடு திரும்பி ஏழு முத்திரைகளை திற** என்றனர். அதன் மூலம் **விவாகமும் விவாகரத்தும்** என்பதைக் குறித்த உண்மையான இரகசியம், **சர்ப்பத்தின் வித்து** இன்னும் முரணான கருத்துக்களை கொண்டிருந்த அநேக காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அது கர்த்தர் உரைக்கிறதாவது என்பதாகும். **(ஈஸ்டர் முத்திரை**, பக்கம் 57, பத்தி 2 நாள் **10.04.1965). குறிப்பு** :சகோ.பிரன்காம் இங்கு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு பின், தன் தரிசனத்தில் கூறப்படாத ஒன்றைக்கூறி, ஏழு தூதர்களும் தங்கள் கைகளில் வெள்ளி பட்டயத்துடன் காணப்பட்டனர் என்கிறார்.

**65. வானத்தில் தோன்றிய மேகவளையத்தின் நோக்கம்:** டூஸான் நகரில் உள்ள பெரிய வானிலை ஆராய்ச்சி கூடாரங்களில் உயரத்திலிருந்த அதை புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். என்ன நிகழ்ந்தது என்று இன்னமும் ஆச்சரியப்படுகிறார்கள். அது என்ன? யாருக்காவது அதைப்பற்றி ஏதாவது தெரியுமா? என்ன, அது எப்படி நேர்ந்திருக்கக்கூடும்? என்று இன்னமும் செய்தித்தாள்களில் கேட்கிறார்கள். அவ்வளவு உயரத்தில் வானத்தில் 30 மைல் உயரத்தில் மூடு பனியோ, காற்றோ, ஈரப்பசையோ கிடையாது. என்ன ஆச்சரியம்! **உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும் போது, பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும் போது அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அந்த நாளிலே (லூக்கா 17) மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார். அவர் தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார்.** உலகமானது சோதோம் கொமொராவைப் போல காணப்படும். ஒ, சகோதரர்களே, ஆவிக்குரிய காரியங்கள் பற்றி அறிவில்லாதிராதிருங்கள். பாருங்கள்! வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே! வார்த்தையைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும், அவைகளே. **சத்தியத்தைக் குறித்தும், தேவன் இந்த மணி வேளையில் செய்கிற காரியங்களைக் குறித்தும் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே (தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்**, பத்தி 167, நாள் 18.07.1965).

**66.** அது மேலே சென்ற போது கலிபோர்னியா, மெக்ஸிகோ, டூஸான் மற்றும் பல இடங்களிலும் பெரிய ஆய்வுக்கு கூடங்களிலிருந்து (Observatories) அதை புகைப்படம் எடுத்தனர். அது விசித்தரமான காட்சியாக இருந்தது. இதோ இங்கே அமர்ந்திருக்கும் சகோ. ஃபிரட்சோத்மேனும், நானும், ஜுன் நார்மேனும் அது மேலே சென்ற போது அங்கே நின்றுக் கொண்டிருந்தோம். அவர்கள் அதைப் புகைப்படம் எடுத்தும் இன்னும் அது என்ன என்பதை அறியாதிருக்கிறார்கள். சில காலம் முன்பு, எல்லாரும் இங்கே இதை பாருங்கள், இவ்விதமாக காணப்படுகிறது. அந்த தூதர்களின் இறக்கைகளையும், அவை எப்படி மூடப்பட்டிருக்கின்றன என்பதையும் பாருங்கள்! என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். (பத்தி 84)

**67.** ஒரு நாள் அதை வலப்பக்கமாக திருப்பிப் பார்த்தபோது இயேசு கிறிஸ்துவை கண்டேன். **ஹாஃப்மேன் வரைந்த படத்தைப் போல மிகவும் தத்ரூபமாக இருந்தது.** தலையில் வெண்மையான டோப்பா அணிந்தவராய், அவரே சர்வத்துக்கும் மேலான அதிகாரம் பெற்றவர் என்பதை காண்பித்தவராய், பூமியை கீழ் நோக்கி பார்த்தவராக நின்று கொண்டிருந்தார். அதை வானங்கள் அறிவிக்கின்றன. வேதாகமம் அறிவிக்கின்றது. செய்தியும் அறிவிக்கின்றது. இவையெல்லாம் ஒன்றாய் இருக்கின்றன. வெள்ளை டோப்பா அணிந்தவராய் சர்வத்துக்கும் மேலான அதிகாரம் பெற்றவர். பாருங்கள். அவருடைய கறுந்தாடியை, உங்களில் அநேகர் அந்த படத்தைப் பார்த்திருக்கிறீர்கள். அதை நாமும் இங்கே வைத்திருக்கிறோம். வலப்புறமாக சாய்த்து பக்கவாட்டில் அதை பாருங்கள். அவரையே புகைப்படம் எடுத்தது போல தத்ரூபமாக இருக்கிறார். அவர்கள் அதை தவறான கோணத்திலிருந்து பார்க்கிறார்கள். நீங்கள் அதை சரியான கோணத்தில் வைத்து பார்க்க வேண்டும். தேவனாகிய கர்த்தர் தாமே எது சரியான கோணம் என்பதை

வெளிப்படுத்த முடியும். உங்களுக்கு வலது பக்கமாய் திருப்பி அதை பாருங்கள். இதோ இருக்கிறார் தத்ரூபமாக, அது அங்கே புகைப்படமாக எடுக்கப்பட்டது (பத்தி 85).

**68.** நான் அவரை முதன் முதலாக பார்த்த போது அவர் ஹாஃப்மேன் வரைந்த தலையைப்போல காணப்பட்டார். இதற்கு முன்பு நான் அதை பார்த்தது கிடையாது; சில வருடங்களுக்கு பின்பு பில்லி சன்டே (Billy sunday) கூடாரத்தில் அதை பார்த்தேன். அன்று முதற்கொண்டு என் வீட்டில் அந்த படங்களில் ஒன்றாகிலும் இல்லாமல் இருந்தது இல்லை. (பத்தி 86)

**69.** இங்கே ஆகாயத்திலே இந்த தரிசனத்திலே நான் கண்ட அதே தேவன், இந்த பள்ளிக் கட்டிடம் நிற்கும் ஸ்தலத்திலே நான் சிறு பையனாக இருந்த போது அவ்விதமாகவே, அவர் காணப்பட்டார். இப்பொழுது வானத்திலே, 33 ஆண்டுகளுக்கு பிறகு இதுவே சத்தியம் என்று அறிவிக்கிறார். (பத்தி87) **( ஏற்ற காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம்,** பத்திகள் 84–87, நாள் 18.07.1965)

**70.** அன்று காலை, எனக்கு முன்னமே அறிவிக்கப்பட்டிருந்த அதே இடத்தில் ஏழு தூதர்கள் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழற்காற்றில் மேலே சென்றதை நாங்கள் கண்கூடாக கண்டோம். விஞ்ஞானமே அதை புகைப்படம் எடுத்தது. **(ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,** பத்தி 15 நாள் 4.12.1965) ஏழு தூதர்களால் உண்டான மேக வளையத்தை சகோ. பிரன்காம் ஒரு இடத்திலாவது அது தலைக்கல் வருகை அல்லது பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை என்று கூறியது கிடையாது. இந்த காரியங்கள் ராஜா உங்களை திசை திருப்புகிறார்.

**71. இப்பொழுது நாம் இங்கு தியானிக்க வேண்டியது என்னவென்றால், ஏழு தேவதூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து சகோ. பிரன்காமுக்கு ஏழு முத்திரைகளின் பேரில் பேச வேண்டியது குறித்து பேசினர். பின்னர் அவர்கள் மேலே திரும்பிச் சென்றனர். அது ஒரு மேகவளையம் போல் காட்சியளித்தது. இது பகல் நேரத்திலே ஆகாயத்தில் வட்டமிடத் தொடங்கியது. இது 28 நிமிடங்கள் மட்டும் காணப்படவில்லை. மாறாக பல மணி நேரங்கள் காணப்பட்டது. அது சூரிய அஸ்தமனத்துக்குப்பின் 28 நிமிடங்கள் காட்சியளித்தது. அது தான் உண்மை. அதை புகைப்படம் எடுத்தனர். ஆனால் சயின்ஸ்(Science) பத்திரிக்கை மட்டும், எடுத்து பிரசுரித்த புகைப்படத்தை வலது பக்கமாக திருப்பிப் பார்த்தபொழுது அது இயேசு கிறிஸ்துவை நியாயாதிபதியாக பிரதிபலிப்பது போல் காணப்பட்டது. இது வானத்தில் ஒரு அடையாளம் மட்டுமின்றி மற்றபடி எதுவும் இல்லை. ஏழு தூதர்களின் கூட்டம். இயேசு கிறிஸ்துவை வெளி. 1:13,14 க்கு ஒப்பாக பிரதிபலித்தது. அது ஒரு அடையாளமாக இருந்ததேயன்றி இயேசு கிறிஸ்துவினுடைய வருகையும் அல்ல பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகையும் அல்ல. பலமுள்ள வேறொரு தூதனுடைய தோற்றம் வேறு. இந்த மேகவட்டத்தின் தோற்றம் வேறு. இது வெளி. 1:13,14க்கு ஒத்ததாக இருந்தது. வெளி.10:1க்கு ஒத்ததாக இல்லை. அவர் நியாயந்தீர்க்க வரும்போது, நீதிபதி அணிவது போன்ற வெண்மயிரைப் பெற்றிருந்தார். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், பத்தி 160) பாருங்கள், அவர் பலமுள்ள வேறொரு தூதனாக காட்சியளிக்கவில்லை. வெளி. 10:1 ன் தோற்றம் வேறு, இதன் தோற்றம் வேறு. ஏழுதூதர்களுடைய கூட்டம் இயேசு கிறிஸ்துவின் முகத்தை நியாயாதிபதியாக பிரதிபலிக்கிறதாக காணப்பட்டது. அவர் பூமியை நோக்கி கொண்டிருப்பதாகவும் வெளிப்படுத்தியது. இது ஒரு அடையாளம். இது தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுதல். மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில். தேவன் இந்த மணி வேளையில் செய்கிற காரியங்களை குறித்து கொடுக்கும் சாட்சி, இந்த மணி நேரத்திற்கான செய்தியை உறுதிப்படுத்துதல் ஆகும். நாம் வாழும் நேரத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை நமக்கு அறிவிக்க தோன்றிய அடையாளம். அந்த வானத்தில் காணப்பட்ட அடையாளம் ஹாஃப்மேன் வரைந்த இயேசு 33 வது வயதில் முகத்தைப் போன்று உள்ளது என சகோ. பிரன்காம் கூறுகிறார். அவர் அந்த படத்தை தனது வீட்டிலும் தான் உபயோகிக்கும் அனைத்து சாதனங்களிலும் வைத்து இருப்பதாக கூறுகிறார். அது அவருடைய தனிப்பட்ட காரியம். அது சபைக்கடுத்த உபதேசம் அல்ல.**

**72.** இங்கு நான் சகோ. பிரன்காம் இயேசுவை தரிசித்ததை தமது பற்பல செய்திகளில் எவ்வாறு கூறிப்பிடுகிறார் என்பதை எடுத்து இங்கு எழுதுகிறேன். முதலாவது சம்பவம் 1933ல் நடந்தாக தெரிகிறது. அந்த சம்பவத்தை கீழே தருகிறேன். நான் கீழே கொடுக்கும் பகுதியை How the angel came to me, and His commission. Foot Prints (Inside Life) page No. 60,61 dt 17.01.1955 லிருந்து எடுத்துள்ளேன். இந்தப் பகுதியை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தவர் சகோ. ரூபன் மாணிக்கராஜ் குடும்பத்தினர்.

**73.** நான் ஒரு நாள் இரவு நம் தேவனாகிய இயேசுவைக் கண்டேன். நான் இதை பரிசுத்த ஆவியானவரின் அனுமதியுடன் தான் கூறுகிறேன் என விசுவாசிக்கிறேன். தேவனுடைய தூதன், தேவனாகிய இயேசு அல்ல, அத்தரிசனத்தில் தேவதூதனைப் போன்று காணப்படவில்லை. ஏனென்றால், நான் தேவனாகிய இயேசுவை குறித்து கண்ட தரிசனத்தில் அவர் ஒரு சிறிய மனிதனாக இருந்தார். நான் வெளியே, வயலிலே, என் தந்தைக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் உள்ளே வந்து அன்றிரவு படுக்கைக்கு சென்ற போது அவரைப் பார்த்து, ஓ தேவனே, இவரை இரட்சித்துக்கொள்ளும் என்றேன்.

**74.** என் தாயார் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டார். நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் அதன்பிறகு நான், ஓ! என் தந்தை குடிகாரனாய் இருக்கிறாரே, எப்படியெனும் நான் இவரை கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும் என நினைத்தேன். நான் வெளியே சென்று முன் அறையிலே கதவிற்கருகில் வைக்கோல் நிரப்பப்பட்ட ஒரு மெத்தையில் படுத்துக் கொண்டேன். அங்கு, என்னிடமிருந்து பத்தடி தொலைவில் ஒரு மனிதன் நின்றுக் கொண்டிருந்தார். வெண்வஸ்திரம் தரித்து ஒரு சிறிய மனிதன். அவரின் புஜங்களை இவ்வாறாக மடித்து வைத்திருந்தார். குட்டையான தாடியுடனும் தோள்பட்டை வரை விழும் முடியுடனும் இருந்தார். அவர் பக்கவாட்டு திசையை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார். சமாதானத்திற்கேதுவான உருவத்துடன் இருந்தார். ஆனால் எனக்கு புரியவில்லை. அவருடைய பாதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இருந்தது. வீசிக் கொண்டிருந்த காற்றில் அவர் வஸ்திரம் அசைந்தது. நான் ஒரு நிமிடம் என்னையே கடித்து பார்த்துக் கொண்டேன். நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை என்று சொன்னேன்.

**75.** நான் வீட்டை நோக்கி பின்புறமாக பார்த்து, அங்கே நான் என் தந்தைக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஏதோ ஒன்று வெளியில் இங்கு என்னை வரச்சொன்னது. இங்கு இம் மனிதர் நிற்கிறாரே என்றேன். நான், கர்த்தராகிய இயேசு போன்று தோற்றமளிக்கிறாரே அவராக இருக்குமோ என்று நினைத்தேன். எங்களுடைய வீட்டை நோக்கி

மிகச்சரியாக நேராக அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக நான் இந்த பக்கமாக நகர்ந்தேன். அவருடைய முகத்தின் பக்கவாட்டுத் தோற்றத்தைக் கண்டேன். ஆனால் அவர்... நான் அவரைப் பார்ப்பதற்கு இந்தப் பக்கமாக திரும்ப வேண்டியிருந்தது. நான் **உம்** என்றேன். அவரோ அசையவில்லை. அவரை நான் அழைக்க போகிறேன் என்றேன். அதற்கு பின் நான் **இயேசுவே** என்றேன். அவர் இவ்வாறாக திரும்பிப் பார்த்தார். அவ்வளவு தான் எனக்கு நினைவு உள்ளது. அவர் தம்முடைய கரங்களை நீட்டினார்.

76. மேலே நான் எழுதிய அதே சம்பவத்தை **வித்து பதருடன் சுதந்தரவாளியாயிருப்பதில்லை**, நாள்: பிப்ரவரி 18, 1965 செய்தியில் சற்று விளக்கமாகக் காணலாம். இந்த கட்டிடம் நிற்கும் ஸ்தலத்தில் முப்பது ஆண்டுகட்கு முன்னர் ஓர் மகத்தான சம்பவம் நிகழ்ந்தது. அச்சமயம் இது துடைப்பம் புற்கள் வளர்ந்திருந்த ஒரு புதர் வயலாக இருந்தது. நான் 200 கெஜம் தூரத்தில் ஒரு சிறு வீட்டில் வசித்து வந்தேன். என் பெற்றோரின் இரட்சிப்புக்காக நான் அப்பொழுது மிகவும் கவலை கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் இப்பொழுது பரம வீட்டில் இருக்கின்றனர். அந்நாட்களில் என் தகப்பனாரைக் குறித்து பிரத்தியேகமான கவலை கொண்டிருந்தேன். அது கோடைகாலமாயிருந்ததால், நான் முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தேன். திடீரென்று நான் உறக்கத்தினின்று எழுந்தேன். என் தகப்பனைக் குறித்த பாரம் என் இருதயத்தில் எழுந்தது.

77. இரவு ஆடையின் மேலேயே நான் கால்சட்டையைப் போட்டுக்கொண்டு, இக்கட்டிடம் நிற்கும் புதர் வயலுக்கு வந்து சேர்ந்தேன். என் தகப்பனுக்காக அங்கு நான் முழங்காற் படியிட்டு, அவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும், அவரை நான் நேசிக்கிற காரணத்தால், அவரைப் பாவியாக மரிக்க விடக்கூடாது என்றும், தேவனிடம் மன்றாடினேன். ஜெபம் செய்தவாறு நான் எழுந்து கிழக்கை நோக்கினேன். அப்பொழுது ஒரு தரிசனம் உண்டானது. மாயையான தோற்றத்தை (Hallucination) நான் நம்புவதில்லை. ஆனால் தரிசனம் என்பது உண்மையானது.

78. **அங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நின்றுகொண்டிருந்தார். தரிசனங்களில் அவரைக் காண்பதோ அதுவே முதல் தடவையாகும்.** என் தலைக்கு மேல் பத்து அடி உயரத்தில் அவர் நின்று கொண்டிருந்தார். அவர் வெள்ளை அங்கி அணிந்திருந்தார். அதன் ஓரங்களில் சுருக்கம்(fringe) வைக்கப்பட்டிருந்தது. அவர் தலைமயிர் தோள் வரை வளர்ந்திருந்தது. வேதம் அவரை விவரிப்பது போன்றே அவர் காணப்பட்டார் – முப்பது வயது தோற்றமுடையவராய், சிறிய உருவம் படைத்தவராய், மெலிந்து காணப்பட்டார். அவருடைய எடை 130 பவுண்டுக்கு அதிகமாய் இருக்க முடியாது. அவரை நான் கண்டபோது, ஏதோ ஒன்றை காண்கிறேன் என்பதை மாத்திரம் அறிந்துக்கொண்டேன். அது ஒருக்கால் தவறாயிருக்குமோ என்று எண்ணினவனாய், கண்களை பிசைந்து மறுபடியும் பார்த்தேன். அவர் சற்று பக்க வாட்டில் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தின் சாயல் (Profile) மாத்திரமே தென்பட்டது. **அவர் முகத்தோற்றம் □ நான் அடிக்கடி அதை தரிசனங்களில் கண்டிருக்கிறேன்** – ஹாஃப்மேன் என்பவர் வரைந்துள்ள "முப்பத்து மூன்று வயதில் கிறிஸ்துவின் முகச்சாயல்" என்னும் படத்தில் இருப்பது போன்றே காணப்பட்டது. எனவே தான் நான் அந்த படத்தை என் வீட்டில் தொங்க விட்டிருக்கிறேன். நான் படிக்கும் புத்தகங்களிலும், கூடுமான இடங்களிலெல்லாம் அதை வைத்திருக்கிறேன். ஏனெனில் அதுபோன்று தான் அவர் காணப்பட்டார். அவர் சிறிய உருவம் படைத்தவராய் எனக்குத் தோன்றினது.

79. அவரை நான் கண்ட போது, என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை."என் ஆண்டவர் நின்று கொண்டிருப்பதை உண்மையாகவே நான் காண்கிறேனா?" என்று வியந்தேன். பீடம் தற்போது இருக்கும் இடத்திலிருந்து சுமார் நாற்பது அல்லது ஐம்பது கெஜம் ஆரத்தில் (Radius) நான் நின்று கொண்டிருந்தேன். நிமிர்ந்து பார்த்தபோது, அவர் அங்கு நின்று கொண்டிருப்பதைக்கண்டேன். நான் விழித்துக்கொண்டிருக்கின்றேனா என்பதை உறுதிப்படுத்த என் விரலைக் கடித்துப் பார்த்துக்கொண்டேன். என்னால் அதை நம்பவே முடியவில்லை. நான் கர்த்தருக்குள் வந்து அப்பொழுது சிறிது சமயம் தான் ஆகியிருந்தது. நான் பிரசங்கம் செய்யத் தொடங்கி, அப்பொழுது ஆறு மாதங்களே கழிந்திருந்தன. நான் துடைப்பம் புல் ஒன்றைப் பறித்து, அதில் ஒரு சிறு துண்டை உடைத்தேன். நாட்டுப்புறங்களில் உள்ளவர், துடைப்பபுல்லில் பல்குத்தி இருக்கின்றது என்பதை அறிவார்கள். அதை வாயில் போட்டு மெல்லத் தொடங்கினேன். "இது உண்மையாக இருக்கமுடியாது நான் சொப்பனம் காண்கிறேன் என்று நினைக்கிறேன்" என்று எண்ணினேன். நான் தரையை உதைத்து, தலையை அசைத்து, கையை பிழிந்து கொண்டு, மறுபடியும் நிமிர்ந்துப்பார்த்தேன். அவர் உண்மையாகவே அங்கு நின்று கொண்டிருந்தார்.

80. அப்பொழுது காற்று வீசத் தொடங்கினது. துடைப்பம் புற்களும் காற்றில் அசையத் தொடங்கின. வரிசையாக உலர வைத்த துணிகள் காற்றில் எவ்விதம் அசையுமோ, அது போன்று அவருடைய அங்கியும் காற்றில் அசைந்தது. "அவருடைய முகத்தை நன்றாகக் கண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்! " என்று எண்ணினேன். அவரோ கிழக்கை நோக்கியவராய், எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தை அருகில் காணவேண்டுமென்று அவரை அணுகினேன். ஆனால் அவரை சரிவர காண இயலவில்லை. அவருடைய கைகளை அவர் முன்னால் வைத்துக்கொண்டிருந்தார். நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவரைக் காணக்கூடாதவாறு அவர் மறைக்கப்பட்டிருந்தார். அவ்விடத்திலிருந்து நான் சற்று நகர்ந்து, அவருடைய கவனத்தை கவர எண்ணி, கனைத்துப் பார்த்தேன். அவரோ அசையவில்லை. அவரை அழைத்துப் பார்க்கலாமே என்று கருதி " இயேசுவே" என்றேன். அவர் தலையை திருப்பி, கரங்களை விரித்தவராய், என்னை திரும்பிப் பார்த்தார். அவ்வளவு தான் எனக்கு தெரியும். விடியற்காலை வரை என்ன நேர்ந்ததென்று எனக்கு ஞாபகமில்லை.

81. வயலில் ஏறக்குறைய இந்த இடத்தில் தான் நான் படுத்துக் கொண்டிருந்தேன். நான் இரவு முழுவதும் கண்ணீர் சிந்தினதால் என் இரவு ஆடை நனைந்து காணப்பட்டது. நான் எழுந்து சென்று விட்டேன். **அவருடைய முகத்தோற்றத்தின் தன்மையை எந்த ஒரு ஓவியனும் தத்ரூபமாக சித்தரிக்கவே முடியாது.** காண்பதற்கு அவர் சாதாரண மனிதனைப் போலவே இருந்தார். அவரைக் காணும் போது, அனுதாபத்தோடும், மரியாதையோடும், பயபக்தியோடும், அழவேண்டுமென்று தோன்றும். ஆனால் அவர் பேசத் தொடங்கினால், முழு உலகத்தையும் அசைக்கும் அளவிற்கு அதில் போதிய வல்லமையுண்டு. **அத்தகைய தன்மையை எந்த ஒரு ஓவியனும், தத்ரூபமாக வரையவே முடியாது.** எதற்காக அந்த காட்சியைக் கண்டேன் என்று இன்றுவரை எனக்கு புலனாகவில்லை.

82. தமது இரண்டாவது தரிசனம் 22.07.1951ல் கண்டது குறித்து செய்தி Law having a Shadow, 03.12.1954ல் கீழ்க் கண்டவாறு ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறார். நான் அதை தமிழில் சுருக்கமாக எனது அறிவுக்கேற்றார்போல் எழுதியுள்ளேன்.

And the Holy Spirit said to me, "Come over here". And I went over, and as I set down, I looked. And I saw like the world, and it was revolving around. And around this world was a rainbow. It looked like a—a streak of red, like a rainbow going around and around the world. Then I went right into that, and when I was standing there in that, I looked and I seen Somebody standing Just above it with His arms out like this. It was our Lord. சகோ.பிரன்காம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்ததாகவும், அங்கு உலகம் போன்ற ஒன்று சுற்றிக்கொண்டிருந்ததாகவும், அந்த உலகம் போன்றதைச் சுற்றி ஒரு வானவில் காணப்பட்டதாகவும் கூறுகிறார். அவர் அதற்குள் சென்று, நின்று கொண்டிருந்தபோது, அவர் மேல் **யாரோ ஒருவர்** நின்று தன் கைகளை விரித்துக்கொண்டிருந்ததாகவும், அது **கர்த்தர்** எனவும் கூறுகிறார். இது அவருக்கு இயேசுவின் இரண்டாம் தரிசனம்.

**83.** மூன்றாவது தரிசனம் **1960**ல் கண்டதாகத் தெரிகிறது. இதை தன் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்து ஒரு ரெக்கார்டிங்சை கேட்டுக் கொண்டிருக்கும்போது, தமது அறையில் கர்த்தராகிய இயேசு நடந்து வந்ததாகக் கூறுகிறார். Remember, reminds me rather, of a recording I was listening to a few days ago, when I was laying in the bed, the day that I saw the Lord Jesus walk into the room, and I don't think I've told you about. To talk about this new ministry to me. When I was laying there in the bed, I was listening at a teacher a teaching on a tape. (BE NOT AFRAID IT IS I, 05.03.1960)

**84.** பின் Go Tell Dt: 17.04.1960 ல் பிரசிங்கித்த செய்தியில் கீழ்க்கண்டவாறு மேற்கூறிய சம்பவத்தை கூறுகிறார். How many of you ever heard me say that I seen Jesus twice in my life in a vision? An I believed I would see Him again before the end time (See?) see Him again. Now, I looked, and the skies was right out there, just looked like I looked through the wall. And there was the Bible standing right like this, great big Bible standing in the skies. Well, there's something got light around the Bible, and out of the Bible come a real pretty golden cross. And it stood out like this, and the lights coming from all around it, and out of that cross He walked. The Bible reflected the cross; the cross reflected Him. And He come walking out, and walked right down to where I was at. I can see it just as plain; I can see the that cross reflecting His hair standing there, hung down over His face. He looked down at me like that, and He said to me, "You are waiting for your new ministry to be confirmed to you". He said, " I' ve already confirmed it to you. Its's already confirmed. You've got to accept it." See? And I stood and listened to Him just a minute. **It come into my mind; I didn't hear that; it just come into my mind.**

இங்கு சகோதரர் ஆகாயத்தில் ஒரு பரிசுத்த வேதாகமத்தை காண்கிறார். அதை சுற்றி ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்ததாம். அந்த வேதாகமத்திலிருந்து ஒரு தங்கச் சிலுவை காணப்பட்டதாம். அது சுற்றி பிரகாசித்துக்கொண்டிருக்க அதிலிருந்து கர்த்தர் நடந்து வந்ததாக கூறுகிறார். வேதாகமம் சிலுவையை பிரதிபலித்தது. சிலுவை கர்த்தரை பிரதிபலித்தது. அங்கிருந்து அவர் சகோதரர் அண்டை நடந்து வந்ததாகவும், அவருடைய தலை மயிர் அவர் முகத்தின் மேல் விழுந்துக் கொண்டிருந்ததாகவும் கண்டாராம். கர்த்தர் சகோதரரை பார்த்து உன்னுடைய புதிய ஊழியம் உனக்கு உறுதியாக்கப்பட நீ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாய், நான் அதை ஏற்கனவே உறுதிபடுத்திவிட்டேன் எனக் கூறினாராம். முடிவில் கர்த்தர் கூறினதாக நான் அதைக் கேட்கவில்லை, மாறாக என் மனதில் அப்படிப்பட்ட ஒரு எண்ணம் வந்தது எனக் கூறி முடிக்கிறார். இது சகோதரர் மூன்றாவது முறையாக இயேசுவை தரிசித்த நிகழ்ச்சியாகும்.

**85.** இங்கு நாம் சகோ. பிரன்காமினுடைய இயேசு குறித்த தரிசனங்களை தியானிக்கும் போது அவைகள் அவர் ஒரு பாப்டிஸ்ட் சபை போதகராக ஊழியத்தின் பாதையில் தன் மழலை பருவத்தில் இருந்த போது அவர் கண்ட தரிசனங்களாக இருக்கிறது. இது குறித்து நான் அவரை குற்றம் சாட்ட விரும்பவில்லை. மாறாக அவரது தரிசனங்கள் புரிந்துக்கொள்ள, ஜீரணிக்க கடினமாக இருக்கிறது. பாருங்கள் **மூன்றாவது தரிசனத்தில், இது கர்த்தர் கூறினதாக நான் கேட்கவில்லை, மாறாக என் மனதில் அப்படிபட்ட ஒரு எண்ணம் உண்டாயிற்று என்கிறார். இது என்ன? இந்த தரிசனம் நமது பக்திவிருத்தியை உண்டாக்குவதாக தோன்றவில்லை.** சகோதரர் கண்ட தரிசனத்தைக் கொண்டு, இயேசு தம்முடைய மாம்ச சரீரத்தில், மாம்ச சரீர சாயலில் சபையில் பரிசுத்த ஆவியின் யுகத்தில் மீண்டும் தரிசனத்தில் காட்சியளிப்பார் என்ற போதனையை நிலை நிறுத்த முடியாது. வேத வாக்கியங்களைக் கொண்டு இதை ஒருவராலும் நிருபிக்கவும் முடியாது.

**86. அவருடைய படத்தை அவரின் முகத்தன்மையை இவ்வுலகில் உள்ள எந்த கலைஞனாலும் ஓவியமாக தீட்ட முடியாது. நான் பார்த்ததிலே ஹாஃப்மேன் வரைந்த 33 வயதில் கிறிஸ்துவின் சாயல் என்ற படத்தை சிறந்ததாக கருதுகிறேன். அதை என்னுடைய புத்தகங்களில், நான் பயன் படுத்தும் எல்லாவற்றிலும் வைத்துள்ளேன். ஏனென்றால் அப்படம் நான் பார்த்ததற்கு மிகவும் நெருக்கமாக அதை போன்று காட்சியளிக்கிறது.**

**87. அந்த படத்தை அன்று பார்த்தீர்கள் அல்லவா? அவர் எப்படி அதை பக்கவாட்டில் திருப்பினார் என்று. ஏழு தூதர்கள் மேலே சென்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம். அதை வலது பக்கம் திருப்பிப் பாருங்கள். அப்பொழுது பூமியை நோக்கிக் கொண்டிருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தை காண்பீர்கள் (பத்தி 63)**

**88. இயேசு நியாதிபதியாக இருப்பதை அது காண்பிக்கிறது.** நீதிபதிகள் ஒருவித வெள்ளை தலை அங்கிகளை (wig) அணிவது வழக்கம்.... இந்த புகைப்படத்தை பக்கவாட்டில் திருப்பிப் பார்த்தால், அவருடைய தாடியின் பக்கத்தில் அவருடைய கறுப்பு மயிரை நீங்கள் காணலாம். அவர் வெள்ளைத் தலைஅங்கியை அணிந்துள்ளார். அவரே அதிகாரத்தின் அந்தமானவர். அவர் மிக உயர்ந்த அதிகாரமுடையவர் (பத்தி **66**).

**89.** இதோ அவர் தூதர்களுடன் காணப்படுகிறார். அந்த செய்தி. அது தான் ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு சாப்பத்தின் வித்து போன்றவை வெளிப்படுதல். (பத்தி **67**). **வெட்கப்படுதல்,** பத்திகள் **63,66,67** நாள் **11.07.1965**)

**90.** கீழ்க்கண்ட பகுதிகளை நான் Trying to do God a service without it being God's wil, Para 91.92.95 dt. 27.11.1965 - லிருந்து எடுத்துள்ளேன். இதை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்த சகோ. ரூபன் மாணிக்கராஜ் குடும்பத்தினருக்கு எனது நன்றி. **அதை வலது புறமாக திருப்பு** என்று ஏதோ என்னிடம் கூறியது. நான் அதை சரியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என நினைக்கிறேன் என்று நினைத்தேன். **வலது புறமாக திருப்பு**

என்றது. பாருங்கள் (பத்தி91) அதை **வலது புறமாக திருப்பு** என்பது அச்சத்தத்தின் பொருளாக இருக்க கூடும் என நான் நினைத்தேன். நான் அவ்வாறாக செய்த போது, உங்களுக்குத் தெரியும், அது என்ன வென்று ஹாஃப்மேன் என்பவர் வரைந்த **33 வயதில் கிறிஸ்துவின் சாயல்** என்ற படம். இங்கே, இங்கே பாருங்கள். அவருடைய கரியதாடியை, அவர் முகத்தை, அவர் கண்களை, அவர் நாசியை, மற்ற எல்லாவற்றையும். அவருடைய சிரசின் வகிடு இதோ மேலே வருவதைப் பாருங்கள். அவர் தேவன் என்பது சத்தியம் என்ற செய்தி விளங்கும் வண்ணம் அவர் சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவர் அண்ட சராசரத்தின் பிரதான நியாயாதிபதி. வானம் மற்றும் பூமியின் பிரதான நியாயாதிபதி. அவர் தேவனே, தேவனேயன்றி வேறு எதுவும் இல்லை. தேவகுமாரன் என்று அழைக்கப்படும் அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாயிருக்கிறார். மனுஷகுமாரனுக்குள் தன்னை திரையிட்டுக் கொண்டார். நம்முடைய இந்த மிகச்சரியான செய்தியானது வேதத்தில் அடையாளம் காணப்படுகிறது. ஆராதனையில் அடையாளம் காணப்படுகிறது. அவருடைய பிரசன்னத்தால் அடையாளம் காணப்படுகிறது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆதலால் அந்த ஏழு முத்திரைகளும் சத்தியமானவைகள். சகோதரர்களுக்கு இதில் கருத்து வேறுபாடு எழலாம். ஆனால் நீங்கள் அமர்ந்து, பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு அனுமதித்து, திறந்த மனதுடன், ஒரு தரம் படித்துப் பாருங்கள் (பத்தி 92)

**91.** அது அவ்வாறாக இருந்த போது, நான் அது என்ன என்று கண்டேன். இதோ அவருடைய கரிய தாடி, அவரின் கண்கள், அவரின் நாசி, அனைத்துமே எல்லாமே நிறைவாக அவருடைய சிரசின் வகிடு இப்பக்கமாக இருப்பது உட்பட. அவர் தேவன், பாருங்கள் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர், **லுக்(Look)** பத்திரிக்கையோ, **லைப் (life)** பத்திரிக்கையோ எந்த வெளியீடு என்று மறந்து விடுகிறேன். ஓ! 17 மே 1963 அப்போது தான் அது வெளியானது. அப்பத்திரிக்கை வேண்டும் என்பவர்களுக்காக கூறுகிறேன். ராக்பெல்லரையும், அவர் மனைவியையும் அதன் பின்னாக செல்ல வைத்த அதே படம் புதிய சயின்ஸ் பத்திரிக்கையில் **அது இன்னும் மறை பொருளாக உள்ளது** என குறிப்பிடப்பட்டுள்ளது. (பத்தி95) **தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு சேவை செய்தல்,** பத்திகள் 89–95 வரை தியானியுங்கள். நாள் 27.11.1965. இது இன்னும் வெளிவராத செய்தி.

**92.** நான் எப்பொழுது வீட்டை விட்டு கடந்து சென்றாலும் அக்காலையில் நாங்கள் அனைவரும் எழுந்து ஜெபிப்போம். **எங்கள் வீட்டு முன் அறையில், நான் என் மனைவி, பிள்ளைகள், அனைவரும் ஹாஃப்மேன் வரைந்த இயேசுவின் படத்தை நோக்கியவாறு சுற்றி நின்று ஜெபிப்போம்.** நாங்கள் அனைவரும் கூடி நிற்கும் போது ஒவ்வொரு பிள்ளையும் எனக்காக ஜெபிப்பார்கள். என் மனைவி எனக்காக ஜெபம் செய்வாள், நான் அவளுக்காக ஜெபிப்பேன், அதன் பின்னரே நான் கடல் கடந்தோ, வேறு எங்குமோ செல்லுவேன். எங்களை தேவனுக்கென்று, அவருடைய சேவைக்கென்று ஒப்புக்கொடுப்போம். (His unfailing words of promise) பத்தி 125 நாள் 21.01.1964. இது இன்னும் வெளிவராத செய்தி. மொழி பெயர்ப்பு சகோ. ரூபன் மாணிக்கராஜ் குடும்பத்தினர்.

**93. அவர் அவ்வாறு செய்தார் என்பதற்காக நாமும் அதை பின்பற்றி இயேசு 33 படத்திற்கு கனம், மகிமை, துதி செலுத்துவோமாகில் நம்மைப் போல் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் யாரும் இல்லை. அது அவருடைய சொந்த காரியம். அது சபைக்கடுத்த உபதேசம் அல்ல. அவருடைய சொந்த காரியங்களுக்கு அவர் பொறுப்பு. நாம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய வாழ்க்கையில் சில தனிப்பட்ட காரியங்கள் இருக்கும். அதற்கு நாம் பொறுப்புள்ளவர்களாக இருப்போம். யாரும் தங்களுடைய தனிப்பட்ட காரியங்களை தேவனுடைய சபையில் உபதேசங்களாக கொண்டு வர முடியாது. இந்த ஹாஃப்மேன் படம் விஷயத்தில் சாத்தான் சபைக்குள் நுழைந்து மக்களை வஞ்சித்து அவர்களை விக்கிரகாராதனைக்கு வழிநடத்தி வருகிறான். அது தான் உண்மை.**

**94.** நான் இந்த செய்தித்தொகுப்பை முடிக்கும் தருவாயில் இருந்த போது ராஜாவிடமிருந்து அவரது **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்தான வெளிப்பாடுகள்** பாகம்.1 மற்றும் பாகம்.2 ஒரு பிரைவேட் சர்குலேஷன் ஆகவும், பாகம்.3 மற்றொரு சர்குலேஷனாகவும் கிடைத்தது. இது முன்பு அவர் எழுதியதில், பிரசங்கித்ததில் சற்று கூட்டப்பட்டு காணப்பட்டது. இவரது இந்த வெளிப்பாடு முற்றிலும் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் முரணானது, அது அவருடைய லௌகிக ஞானம், அது பரத்திலிருந்து வரவில்லை என்று முன்பே எழுதியுள்ளேன். இவரது தவறான உபதேசங்கள் குறித்து மேற்கொண்டும் நான் எழுத வேண்டிய காரியங்கள் உண்டு. அவைகளை இனி வர இருக்கும் செய்தித்தொகுப்புகளில் எழுதுவேன். தேவனுடைய வார்த்தையோடு, இக்காலத்திற்குரிய செய்தியோடு தன்னுடைய வெளிப்பாடு என்று ஒன்றைக்கூறி இவர் கலப்படம் செய்கிறார். சாத்தானின் பொய்யை எடுத்து தேவனுடைய வார்த்தையோடு, இக்காலத்திற்குரிய செய்தியோடு கலப்படம் செய்து வருவதே இவரது பணியாக இருந்து வருகிறது. ஆதலால் இவரது உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், மோசம் போகாதீர்கள் என உங்களை எச்சரிக்க வேண்டியது என் மேல் விழுந்த கடமையாக இருக்கிறது.

**95.** முதல் சர்குலேஷனில் **வெண்மேகஸ்தம்பத்தின் இரகசியம்** என்ற தலைப்பில் உள்ள செய்தியில் **ஃஹாப்மேன் இயேசு 33** படம் குறித்து எழுதப்பட்டிருந்தது. அதில் மத்.9:20ல் கூறப்பட்டுள்ள 12 வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீயின் பெயர் **வெரோனிக்கா** என்றும், இயேசுவின் கல்வாரி பாடுகள் போது அந்த கனமான சிலுவையை சுமந்து கொண்டு சென்ற போது மூன்று முறை குப்புற விழுந்து முகமெல்லாம் இரத்த மயமாக காட்சியளித்தார் என்றும், அப்பொழுது இந்த ஸ்திரீ ஒரு வெள்ளை துணியை எடுத்து கண்ணீரோடு ஓடி வந்து அவரது முகத்தை ஒற்றி எடுத்தாள் எனவும், இயேசுவின் இரத்தம் பூசின முகத்தின் சாயல் அந்த வெள்ளை துணியில் இன்றைக்கும் உள்ளது. அதை ரோமாபுரி வாட்டிகன் நகரில் ஒரு கண்ணாடிப் பெட்டியில் பாதுகாத்து வைத்திருப்பதாகவும், இந்த துணியில் படிந்த இயேசுவின் திருமுகச்சாயலை பல ஓவியர்கள் வரைய முயற்சித்து தோல்வி அடைந்ததாகவும், கடைசியில் இரு கண்களும் தெரியாத ஃஹாப்மேன் என்ற ஓவியருக்கு தேவன் தரிசனத்திலே தனது சாயலை காண்பித்தாராம். ஐசுவரியவான் ஒருவரும் இயேசுவும் பேசிக்கொண்டு நின்ற அந்த காட்சியை அவர் வரைந்த போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு இந்த பூமியில் மனிதனாக ஜீவித்த திருமுகத்தை தத்ரூபமாக காண்பிக்கிறது எனவும் எழுதியுள்ளார். இதை தீர்க்கதரிசி வில்லியம் மாரியன் பிரன்காம் உறுதிபடுத்திவிட்டார் எனவும் ஆதலால் அந்த இயேசுவின் திருமுகப்படத்தை நாம் நமது வீடுகளிலும், சபைகளிலும் வைத்திருப்பது தவறு இல்லை என எழுதி, அதை நியாயப்படுத்துகிறார்.

**96.** வேத வாக்கியங்கள், இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் ஒருவன் தன் குலகோத்திரத்தில் மாத்திரமே திருமணத்தில் பெண் கொடுப்பது, எடுப்பது விக்கிரகாராதனை அல்ல. இதை விக்கிரகாராதனை என்பவன் ஒரு பேலியாளின் மகனே, பிசாசே. அடுத்து ஒரு ஓவியன் வரைந்த **இயேசு 33** என்ற படத்திற்கு ஆராதனைக்குரிய

கனத்தையும், மகிமையும் கொடுப்பது விக்கிரகாராதனை அல்ல என்பவன் யார்? அவன் பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம். உங்களை மோசம் போக்கும் பிசாசானவன். கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே **இயேசு 33** படத்தை உங்கள் வீட்டு முகப்பில் தொங்கவிட்டு அதற்கு தேவனுக்குரிய கனத்தையும், மரியாதையும், மதிப்பையும் கொடுப்பது நிச்சயமாக ஒரு விக்கிரகாராதனையேயன்றி, ஒருவன் தன் குலகோத்திரத்தில் திருமணம் செய்வது அல்ல. அதுதான் உண்மை.

97. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு தம்முடைய சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர்களுக்கு தரிசனம் அருளினார். அதன்பின் அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளபட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். **அதன்பின் இயேசு, தான் பூமியில் வாழ்ந்தபோது இருந்த தமது திருஉருவத்தை யாருக்கும் வெளிப்படுத்தினதாக, திருவுருவத்தில் காட்சியளித்ததாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. வேதவாக்கியங்களில் ஆதாரமாக இல்லாத எதையும் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது.**

98. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம் என்கிறான். (2கொரி.5:16) Though we have known Chirst after the flesh, yet now henceforth know we him nomore. After the flesh = from the human view point. அதவாது மாம்சத்தின்படி அறியோம் என்பது (இந்த பரிசுத்த ஆவியின் யுகத்தில்) மாம்சரீரத்தில், மாம்சசாயலில் அறியோம் என்று பொருள்படும்.

99. அன்றொருநாள் சவுல் (பவுல்) பிரயாணமாய் போய் தமஸ்குவுக்கு சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி (A Light from heaven) அவனை சுற்றிப்பிரகாசித்தது ; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்கு கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்றார். அப்.9:3–5. பாருங்கள் இயேசு தான் பூமியில் வாழ்ந்த மாம்சசரீரத்தில் தோன்றி, அல்லது அதன் மாம்சசாயலில் தோன்றி நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, இதோ என்னைப் பார் என்று கூறவில்லை. ஏன் என்றால் இயேசுவை தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியின் யுகத்தில் மாம்சசரீரத்திலே அல்லது மாம்சசாயிலிலோ காணமுடியாது. மனுஷகுமாரனுடைய யுகம் முடிந்து, பரிசுத்த ஆவியின் யுகத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோம். இந்த யுகத்தில் லூக்.17:30 நிறைவேற மனுஷகுமாரன் தன்னை வில்லியம் மாரியன் பிரன்காமுக்குள் வெளிப்படுத்தினார். அது தான் உண்மை. ஏன் அவர் தன்னை சகோ. பிரன்காமுக்குள் வெளிப்படுத்த வேண்டும்? ஏன் அப். பவுலுக்குள் தன்னை வெளிப்படுத்த வேண்டும்? கலா.1:16. இந்த யுகத்தில் அவர் மீண்டும் மாம்சசரீரத்தில் தோன்றுவது அநாதி தீர்மானமல்ல. அவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்குள் தான் தன்னை வெளிப்படுத்துவது அநாதி தீர்மானம். அவரால் வெளிப்பட முடியாது என நான் கூறக்கூடாது. ஏன் என்றால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

100. அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு இடத்தில் கூறும் போது : அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்றார் (Lord stood by him – அப்.23:11). என்று கூறப்பட்டுள்ளது. இதைக்கொண்டு இயேசு மாம்சசரீரத்தில் அல்லது மாம்சசாயலில் பவுலின் அருகே நின்றார் எனக்கூற முடியாது. ஏன் என்றால் இந்த சம்பவத்தை பவுல் மற்றொரு இடத்தில் கூறும்போது (அப்.27:23) என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் (An angel of God) என்று கூறுகிறான். அப்படியானல் இந்த தேவனுடைய தூதனானவர் யார்? அவர் நியாயாதி.2:1 ல் கூறப்பட்டுள்ள கர்த்தருடைய தூதனானவர். (Angel of the Lord). ஆம், இயேசு தமது மாம்சசரீரத்தில், அதன் சாயலில் அல்லது மனுஷரூபமாய் காட்சியளிப்பதில்லை.

101. அன்று மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன். நீங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் பெற்று, தேசத்தில் வெகு நாள் இருந்து பின்பு, நீங்கள் உங்களை கெடுத்து, யாதொரு விக்கிரகத்தையாவது யாதொரு சாயலான சுரூபத்தையாவது பண்ணி, உன் தேவனாகிய கர்த்தருக்கு கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தால் நீங்கள் யோர்தானை கடந்து சுதந்தரித்து போகிற தேசத்திலிராமல், சீக்கிரமாய் முற்றிலும் அழிந்து போவீர்கள் என்று, இந்நாளில் உங்களுக்கு விரோதமாய் வானத்தையும், பூமியையும் சாட்சி வைக்கிறேன். நீங்கள் அதிலே நெடுநாள் இல்லாமல் நிர்மூலமாக்கப்படுவீர்கள் என்றான். (உபா. 4:24–26)

**102. இன்றும் அதே எச்சரிப்பை நான் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். நீங்கள் உங்களை கெடுத்து வானத்திலே தோன்றிய ஒரு அடையாளத்தின் சாயலாக படங்களையும், சித்திரங்களையும் தீட்டி அவைகளுக்கு, கனத்தையும், மகிமையையும், செலுத்துவீர்களானால் அன்று இஸ்ரவேலருக்கு மோசே நிகழும் என்று எச்சரித்தது போன்று இன்று உங்களுக்கும் நிகழும் என நான் எச்சரிக்கிறேன்.** அன்று மோசே தேவனை நோக்கி; நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்கு சொல்லும்போது, அவருடைய நாமம் என்னவென்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்கு தேவன் **இருக்கிறவராக இருக்கிறேன்.** என்று மோசேயிடம் சொன்னார். யாத்.3:13,14.

103. அதன் பின் ஒருநாள் மோசே; உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும் என்றான். அதற்கு அவர்; என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாக கூறுவேன்; ----- நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக்கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார். பின்னும் கர்த்தர் இதோ, என்னிடமாய் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு, என் மகிமை கடந்து போகும்பொழுது நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகும் மட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்; பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார். யாத்.33:18–23. ஏன்? ஒரு மனுஷனாலும் அவரைக் கண்டு உயிரோடு இருக்க முடியாது. வேதவாக்கியம் இப்படியிருக்க ஹாஃப்மேன் வரைந்த **இயேசு 33** படத்தில் உள்ள முகத்தை **இருக்கிறவராக இருக்கிறேன்** என்பவருக்கு ஒப்பிடும் இவர்கள் யார்? நிச்சயமாக அது பிசாசாகத்தான் இருக்கவேண்டும்.

**104. தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்த சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? ஹாஃப்மேன் வரைந்த இயேசு33 என்ற வரைபட சாயலுக்கா ஒப்பிடுவீர்கள்? ஆதியிலே வார்த்தை இருந்தது. யோ.1:1. அந்த வார்த்தை மாம்சமானது**

யோ.1:14. அவர் உலகத்திலிருந்தார். யோ.1:10. தேவனுடைய வார்த்தையை நாம் கொண்டுள்ளோம். ஆனால் தேவனுடைய சித்திரம் எனக் கூறி ஒன்றை கொண்டிருக்க தேவன் நம்மை அனுமதிக்கவில்லை. அவர் எடுத்துக்கொள்ளப்படுகிறபோது சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன் என்றார். யோ.14:27. என்னுடைய முகச்சாயலை வெரோனிக்கா ஒரு வெள்ளைத்துணியில் பதித்து வைத்திருக்கிறாள் அதை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்று அவர் கூறாமல், அவருடைய சமாதானத்தையே வைத்துப் போகிறேன் என்றார். கத்தோலிக்க திருச்சபையின் தில்லுமுல்லுகள் உங்களுக்கு தெரியும். அதை உங்களுக்கு திருஷ்டாந்தமாக எடுத்து உபதேசிப்பவன் யாராக இருக்க முடியும் என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

105. ஆகாயத்தில் காணப்பட்ட மேகவளையத்தையோ அல்லது அதற்கு ஒப்பான ஹாஃப்மேன் இயேசு 33 படத்தையோ வீட்டில் வைத்து, அதற்கு ஆராதனைக்குரியவரின் கணத்தையும், மரியாதையையும் செலுத்துவது 100க்கு 100 சதவீதம் ஒரு விக்கிரகாராதனையே. பிள்ளைகளே நீங்கள் விக்கிரகாராதனைக்கு விலகி, உங்களை காத்துக் கொள்ளுங்கள் ஆமென்! பிசாசுக்கு இடங்கொடாதீர்கள். போதக சிட்சையே ஜீவவழி. தேவசமாதானம் உங்கள் அனைவரோடும் சதா காலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

# கர்த்தருடைய கிருபை எனக்குப் போதும்

1. இந்நாட்களில் 11.06.2006 அன்று நான் சாத்தானால் ஐந்து ஆண்டுகளுக்குப்பின் இரண்டாவது முறையாக மீண்டும் தாக்கப்பட்டு மாரடைப்புக்குள்ளானேன். ஆனாலும் தமது சரீரத்திலே என்னுடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தவருடைய தழும்புகளால் குணமானேன். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

2. **மாரடைப்பு வரக்காரணங்கள் என்ன?** 1. பரம்பரைத்தன்மை. 2. சர்க்கரை நோய். 3. உடற்பருமன். 4. உடற்பயிற்சியின்மை. (உடலுழைப்பு) 5. உயர் இரத்த அழுத்தம். 6. இரத்தத்தில் அதிக கொழுப்பு. 7. மனஉளைச்சல். 8. புகைப்பிடித்தல் போன்றவைகளாகும்.

3. எனக்கு முதன்முதலாக மாரடைப்பு 11.11.2001 ல் வந்தபோது உயர் இரத்த கொதிப்பு (Hypertension-BP.) என திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டாக்டர்கள் கூறினர். இதனால் 2001 முதல் 2006 வரை உயர் இரத்தஅழுத்தம் ஏற்படுவதை தடுக்க மாத்திரைகள் எடுத்துவந்தேன். இரண்டாவது முறையாக 11.06.2006 ல் வந்தபோது ஸ்ரீராமசந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டாக்டர்கள் இது இரத்தக்குழாய்களில் இரத்த உறைவு கட்டிகளால் இரத்த ஓட்டம் தடைபட்டு ஏற்பட்டிருக்கலாம் என கருத்து தெரிவித்து, மேலும் அதை உறுதி செய்ய எப்படியும் ஆஞ்சியோகிராம் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள். அரசு, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை டாக்டர்கள் எனக்கு சர்க்கரை நோய் (Diabetes Mellitus - Sugar) இருப்பதாக சந்தேகித்தார்கள். ஆதலால் பலவிதமான இரத்த சோதனைகள் செய்தனர். முடிவில் சர்க்கரை நோய் இல்லை எனத் தெரிவித்தனர்.

4. **ஒருவருக்கு மாரடைப்பு எப்படி ஏற்படுகிறது?** ஒருவருடைய ஆயுள் முழுவதும் எந்தவிதமான ஓய்வுமின்றி ஓயாமல் இயங்கி கொண்டிருக்கும் உறுப்பு இதயம். இதயம் வேலை செய்கிறதை நிறுத்திவிட்டால், உடனே மரணம். இதயத்திசுக்கள் செயல்பட அவற்றிற்கு இரத்தத்தை கொடுக்கும் இரத்தக்குழாய்களின் உட்சுவரில் இரத்த உறைவுகட்டிகள் அல்லது கொழுப்புப்பொருள் மிகுதி வழியை அடைத்துக்கொள்வதாலும், அல்லது தமனி நாளம் தடித்து உள்வட்டம் குறைவதாலும் போதிய இரத்தம் பாய்வது குறைகிறது. இதனால் பிராணவாயு பற்றாக்குறை ஏற்பட்டு இதயத்திசுவின் உயிரணுக்கள் இறந்து விடுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படுகிறது.

5. இதனால் மார்பின் இடது புறத்தில் அல்லது நடுப்பகுதியில் கடுமையான அழுத்தம், வலி ஏற்பட்டு மூச்சு விடமுடியாமல் இறுக்கம் உண்டாகிறது. இந்த வலி கழுத்துக்கும், கைகளுக்கும் பரவுதலுண்டு. வலி அதிகரிக்க, உடல் முழுவதும் வியர்வை கொட்டும். இதனால் உடல் குளிர்ந்துவிடும். இரத்த அழுத்தம் மிகவும் குறைந்து நாடி தளர்ந்துவிடும். சுயநினைவு இழந்து மயக்கம் ஏற்படும். தோள்பட்டையிலும் வலி தோன்றி அது விரல் நுனி வரை பாயும்.

6. சர்க்கரை நோயாளிகளுக்கும், வயதானவர்களுக்கும் மேற்சொன்ன அறிகுறிகள் எதுவும் இல்லாமலும் மாரடைப்பு ஏற்பட சாத்தியங்கள் உள்ளன. எனக்கு மார்பின் இடது புறத்தில் வலி அதிகம் ஏற்பட்டது. இரத்த அழுத்தம் சற்று அதிகம் தான். ஆதலால் சற்று மயக்கமான நிலை. இதனால் என்ன நடக்கிறது என்பதை அதிகமாக அறிந்துகொள்ள முடியாத நிலை உண்டானது.

7. பொதுவாக மாரடைப்பு வந்தவர்கள், அதற்கு பின்னர் ஆரோக்கியமாக வாழ எத்தகைய சிகிச்சை முறைகள், மருந்துகள், மாத்திரைகள், அனுதின வாழ்க்கைமுறை, அன்றாட உணவு பழக்க வழக்க முறையில் மாற்றங்கள் தேவை என்பதை மருத்துவ ரீதியில் முடிவு செய்ய ஆஞ்ஜியோகிராம் என்ற மருத்துவ பரிசோதனை தேவைப்படுகிறது. இருதய இரத்தக்குழாய்களை பரிசோதிக்கும் ஒரு மருத்துவ பரிசோதனை முறை தான் இந்த ஆஞ்ஜியோகிராம் என்பது. இதன் மூலம் இருதய இரத்தக்குழாய்களில் எங்கெங்கு எத்தனை, எத்தகைய அடைப்புகள் உள்ளன என்பதை கண்டறிய முடியும். ஒரு வேளை நிறைய தீவிரமான அடைப்புகள் இருதய இரத்தக்குழாய்களில் இருந்தால் பை–பாஸ் ஆப்ரேஷன் தேவைப்படும். பை–பாஸ் ஆப்ரேஷன் செய்யக்கூடாத தீவிரமான அடைப்புகளும் இருக்கக்கூடும்.

8. எனக்கு இரண்டாவது முறை மாரடைப்பு வந்துவிட்டதால் ஆஞ்ஜியோகிராம் பரிசோதனை உடனே செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்குள்ளானேன். அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இந்த பரிசோதனையை மேற்கொள்ள எனக்காக அரசு பொது மருத்துவமனைக்கு சிபாரிசு செய்தது. ஏனென்றால் சென்னை அரசு பொது மருத்துவமனையில் மட்டுமே இந்த பரிசோதனைக்கான கருவிகள் உண்டு. மற்ற அரசு மருத்துவமனைகளில் எங்கும் கிடையாது. தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்கள் இந்த பரிசோதனைக்காக சென்னை அரசு

பொது மருத்துவமனைக்கே வர வேண்டியுள்ளது. ஆதலால் உடனே இந்த பரிசோதனை செய்யமுடியாது. பல மாதங்கள் காத்திருக்க வேண்டும். தனியார் மருத்துவமனையில் உடனே பரிசோதனை செய்து கொள்ளலாம். ஆனால் குறைந்த பட்சம் ரூ.20,000/– வரை இதற்காக தேவைப்படும். தனியார் மருத்துவமனையில் உடனே இந்த பரிசோதனை செய்துக்கொள்ள போதுமான பண வசதிகள் என்னிடம் இல்லை. ஆதலால் காலதாமதம் ஆனாலும் பரவாயில்லை, அரசு பொது மருத்துவமனையிலே பரிசோதித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து 21.07.2006 அன்று அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றேன்.

**9.** அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கர்த்தர் எனக்காக சகோ. ரூபன் மாணிக்கராஜ் அவர்களை வைத்திருப்பது போன்று, அரசு பொது மருத்துவமனையில் யாரும் இல்லையே என்ற கவலையோடு சென்றேன். என் தேவனுடைய தயவுள்ள கரம் என் மேல் இருந்ததால் அங்கு சென்ற இடங்களில் எல்லாம் மனுஷர்களுடைய கண்களில் தயவு கிடைக்க அநுக்கிரகம் பண்ணினார். 21.07.06 அன்று காலை 10 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன். டாக்டர்களை சந்தித்து ECG, Echo, X-Ray போன்ற அனைத்து பரிசோதனைகளையும் முடித்து, ஆஞ்ஜியோகிராம் பரிசோதனை செய்ய நாள் குறித்து 11 மணி அளவில் வெளியே வந்துவிட்டேன். மருத்துவமனையில் சென்ற பகுதிகளில் எல்லாம் பணி செய்கிறவர்களுடைய கண்களில் தயவு கிடைத்தது. ஒரு மணி நேரத்திற்குள் அனைத்து பரிசோதனைகளையும், நடைமுறை செயல்பாடுகளையும் முடித்து வெளியே வந்தது எனக்கு மிக்க ஆச்சரியமாகவே இருந்தது. தேவன் என் பட்சத்தில் இருந்து, எனக்காக அனைத்து காரியங்களையும் நடப்பித்து வருகிறார் என்பதை மட்டும் அறிந்துக்கொண்டேன். ஆஞ்ஜியோகிராம் பரிசோதனைக்காக நாள் 15.09.06 நிர்ணயிக்கப்பட்டது. சுமார் இரண்டு மாதங்கள் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறதே என்ற மனப்பாரம் உள்ளத்தில் இருந்தது. ஆனாலும் கர்த்தர் மேல் என் பாரத்தை வைத்துவிட்டு வெளியே வந்தேன்.

**10.** நம்முடைய சகோதரர்களில் ஒருவர் தனக்கு அறிமுகமான, பொது மருத்துவமனையில் பணிபுரியும் ஒருவரிடம் என் காரியங்களை எடுத்துக்கூறி, எப்படியும் ஆகஸ்டு முதல் வாரத்தில் பரிசோதனை நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதாகக் கூறினார். அவருக்காக காத்திருந்தேன். ஆனால் காரியம் கைகூடி வருவதாக தெரியவில்லை. உடனே தாமதிக்காமல் நான் என் சொந்த முயற்சிகளை எடுக்க ஆரம்பித்தேன். எனது சித்தப்பா ஒரு ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசு டெப்புட்டி செக்ரட்ரி. அவர்களை நாடினேன். அவர்கள் தங்களுடன் ஜெபஐக்கியத்தில் உள்ள, அரசு பொது மருத்துவமனையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஒரு சகோதரியை அணுகி எனக்கு சீக்கிரமாக பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்ய கேட்டுக்கொண்டார்கள். அன்னார் என்னை தனக்கு தெரிந்த, அரசு பொது மருத்துவமனையில் இதய இயல்துறையில் பணிபுரியும் ஒருவரிடம் அனுப்பினார்கள். அவர்கள் என்னை உடனே ஆஞ்ஜியோகிராம் பரிசோதனை செய்யும் டாக்டர் ஒருவரிடம் அழைத்துச் செல்ல, அவர் அன்றே 11.08.2006 அன்று மருத்துவமனையில் என்னை பரிசோதனைக்கு அட்மிட் செய்தார்கள். பரலோகத்தின் தேவன் எனக்கு காரியத்தை கைகூடி வரப்பண்ணினார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். 12 மற்றும் 13 தேதிகளில் பரிசோதனைக்கான அனைத்து முன்னேற்பாடான பற்பல பரிசோதனைகள் நடந்தன. 14.08.2006 அன்று காலை 9.45 மணியளவில் எனக்கு முதல் நபராக பரிசோதனை நடந்தது.

**11.** இந்த பரிசோதனையை காலில் மேல் தொடையின் உட்புறத்தில் உள்ள தமனி மூலம் செய்வதால், மல்லாங்கு படுத்து வலது காலை மடக்காமல் பரிசோதனை நடந்தது முதல் மறுநாள் காலை வரை அதே நிலையில் படுத்துக் கிடக்க வேண்டியதாய் இருந்தது. ஏனென்றால் இதில் அஜாக்கிரதையாக இருந்தால் சில சமயம் காலில் நிரந்திரமாய் பிரச்சனையே ஏற்பட்டு விடும் என்றார்கள். இது கொஞ்சம் சித்திரவதை போல் தான் தோன்றியது. ஆனாலும் கர்த்தர் பெலன் கொடுத்தார்.

**12. 15.08.2006** அன்று மதியம் எனக்கு பரிசோதனை முடிவு தெரிவிக்கப்பட்டு நான் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன். எனது இதயத்தில் வலது இதயதமனி, இடது இதயதமனி என்ற இரத்தக்குழாய்களின் உட்சுவர்களில் மிக்க நீளவாட்டில் கொழுப்பு பொருள் மிகுதியாக உறைந்து, அதனால் தீவிரமான அடைப்புகள் ஆங்காங்கு ஏற்பட்டுள்ளது. மேலும் வலது, இடது தமனிகளின் கிளைகளிலும் ஆங்காங்கு அடைப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் இருதயத்தில் இரத்த ஓட்ட வழிகள் மிக்க குறுகியுள்ளது எனத் தெரியவந்தது. இதனால் இதயத்தில் இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதை மும்மடி நெஞ்சுப்பை நாள நோய் (Triple Vessel Coronary Artery disease) என்று அழைக்கிறார்கள். இந்நிலையில் மரணம் எப்பொழுதும், எந்த நேரத்திலும், எந்த நாளிலும் நேரிட வாய்ப்புகள் உண்டாம். ஆம், எனக்கு மரணத்தை உடனடியாக கொண்டு வர சாத்தான் தீவிரமாக முயற்சிகள் செய்தான். ஆனால் கர்த்தர் அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய என் ஊழியத்தை வைத்திருப்பதால், அந்த பணி என் மூலமாக இன்னும் முற்றுப் பெறாததால் அவர் என் ஆயுள் காலங்களை கூட்டிக்கொடுத்துள்ளார். ஆதலால் நான் அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவருக்கு செலுத்தினேன்.




**13.** நீங்கள் இங்கு காண்பது என் இதய தமனி (வலது, இடது) மற்றும் அதன் கிளைகளில் உள்ள தீவிரமான அடைப்புகளை வெளிப்படுத்தும் ஆஞ்ஜியோகிராம். அடைப்புகள் மார்க்கிங் செய்யப்பட்டுள்ளது.

**14.** என்னுடைய இதய இரத்தக் குழாய்களில் உள்ள நீளவாட்டிலான அடைப்புகள் பை–பாஸ் ஆப்ரேஷன் செய்யக்கூடிய நிலையை கடந்துவிட்டது. இன்றைய நிலையில் ஒரே ஒரு மருத்துவ வழியானது: அடைப்புகள் இன்னும் மேற்கொண்டு பரவாமல் தடுக்க மருந்து, மாத்திரைகள் ஒழுங்கும் கிரமமுமாக வேளாவேளையில் சாப்பிட்டு வருவதும், மற்றும் இதர மருத்துவ செய், செய்யாதே; சாப்பிடு, சாப்பிடாதே போன்ற நடைமுறைகளை கடைப்பிடித்து வருவது மட்டுமே ஆகும். மனிதனுடைய ஆற்றலுக்கும், அறிவுக்கும், திறமைக்கும் உட்பட்ட காரியங்களில் தேவன் பொதுவாக ஈடுபடுவது இல்லை. ஒன்று அவர்களுடைய ஆற்றலுக்கும், அறிவுக்கும், திறமைக்கும் அப்பாற்படும் போது தான் தேவன் அங்கு இடைபடுகிறார், அவருடைய நாமத்தை அங்கு மகிமைப்படுத்துகிறார் என்பதை நான் நன்கு அறிவேன். ஆக தற்போது என் காலங்கள் அவருடைய கரத்தில், அவருடைய மகிமைக்கென்று இருக்கிறது.

நிச்சயமாக அவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார். அல்லேலூயா!

15. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்டால், ஒருவனின் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும் என யோபு கூறுகிறான். ஆதலால் வேலை இல்லாதவர்கள், பிரயோஜனம் இல்லாத வார்த்தைகளினாலும், உபயோகம் அல்லாத வசனங்களினாலும் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து ஒருவருக்கொருவர் தர்க்கிப்பதினால் யாருடைய ஆத்துமாவுக்கும் எந்தவிதமான பிரயோஜனம் இல்லை. மருத்துவர்கள் தங்களுக்குத் தெரிந்ததை கூறுகிறார்கள். ஐம்புலன்களில் அவர்கள் இரண்டு புலன்களை உபயோகிக்கிறார்கள். ஒன்று உணர்ச்சி, மற்றொன்று பார்த்தல். அவர்களால் நமது சரீரத்தில் ஏதோ ஒன்றை உணரமுடிகிறது. அல்லது எக்ஸ்ரே படத்தில் ஏதோ ஒன்றை காணமுடிகிறது. அவர்களுக்கு வேலை செய்ய அவைகள் மாத்திரமே உள்ளன. அதைக் கொண்டு அவர்கள் அவர்களுடைய முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். நாம் அதை பார்க்கக் கூடாது. பொதுவாக டாக்டர்கள் நாங்கள் சுகமளிப்பவர்கள் என்று உரிமை கோரமாட்டார்கள். நாங்கள் இயற்கைக்கு உதவிசெய்கிறோம் என்றே கூறுவார்கள். **சுகமளிப்பவர் ஒருவர் மாத்திரமே. அவர் தான் தேவன். தேவன் நமக்கு அளித்த வாக்குத்தத்தம் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.** அத்துடன் அது முடிவு பெற்றது. நான் குணமானேன்! குணமானேன்!! கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

16. இந்நாட்களில் அசைவப்பிரியனாக இருந்த நான் சைவத்திற்கு தள்ளப்பட்டுள்ளேன். ஆனாலும் முற்றிலுமாக அல்ல. பொதுவாக பல இடங்களுக்கு போக்கும் வரத்துமாக இருந்த நான் தற்போது மிக்க குறைந்த பட்ச தூரத்திற்குள், சுமார் 30 கி.மீ க்குள் என் பிரயாணத்தை முடித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். அதுவும் பிரதிமாதம் ஓரிருமுறை மட்டுமே. ஊழியத்தின் பாதையில் எனது அனைத்து பணிகளையும் நானே செய்து வந்தேன். ஆனால் தற்போது சிலகாரியங்களில் உதவிகள் தேவைப்படுகிறது. இப்படியாக என் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் என் பலவீனத்தில் கர்த்தருடைய பலம் பூரணமாக காணப்படுகிறது. ஆதலால் கர்த்தருக்கு சித்தமானால் எனக்கு அருமையானவர்களை கூடிய சீக்கிரத்தில் முகமுகமாக சந்திப்பேன். கர்த்தரோ என்மேல் நினைவாய் இருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய இன்றைய கிருபை எனக்குப் போதும்.

17. இந்நாட்களில் தூர இடங்களிலிருந்து சகோதரர்கள் கடந்த செய்தித்தொகுப்பு அவர்களுக்கு மிக்க பிரயோஜனமாக இருந்தது என சாட்சிக் கொடுத்தார்கள். என்னுடைய சரீர நலன்களை விசாரித்து ஆறுதலான வார்த்தைகளைக் கூறினார்கள். எனக்காக தங்கள் குடும்ப, தனிப்பட்ட ஜெபங்களில் ஜெபித்து வருவதாகக் கூறினார்கள். மேலும் சிலர் ராஜாவின் நீதிமன்ற வழக்கு விஷயத்தில் கோவை வந்து சத்தியத்திற்கு சாட்சியாக கூண்டில் ஏறவும் தயாராக இருப்பதாக கூறி என்னை மிகவும் உற்சாகப்படுத்தினார்கள். உங்களின் அன்பிற்கும், ஆதரவிற்கும் நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் அனைவருக்கும் எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து என் நன்றியை என் குடும்பத்தினரோடு சேர்ந்து தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்பு எழுதியபடி உங்கள் ஜெபமே, எங்களது ஜெயம். **குறிப்பு:** கடந்த செய்தித்தொகுப்பில் தேவனுடைய சபையிலிருந்து எனது மருத்துவ செலவுக்காக ரூ.3000/– வரை உதவிகள் கிடைத்தது என எழுதியிருந்தேன். கர்த்தருடைய கிருபையினால் இந்நாட்களில் அது ரூ. 14,000/–க்கு மேல் சென்றது. அதாவது ஒரு சகோதரர் நான் அவரிடம் பட்டிருந்த கடன் ரூ. 2000/– ஐ மன்னித்து, அதை என் மருத்துவ செலவுக்காக பிரயோஜனப்படுத்திக்கொள்ள கேட்டுக்கொண்டார். அடுத்த சகோதரர் ரூ. 8,756/– மருத்துவ மற்றும் ஊழியச் செலவுக்காக கொடுத்தார். மூன்றாவது சகோதரர் எனக்கு தேவையான இரு மாத்திரைகளை சுமார் ரூ.300/– க்கு வாங்கிக் கொடுத்தார். நான் திருப்தியடைந்திருக்கிறேன். என்னுடைய தாழ்மையில் என்னை நினைத்த, என் தேவைகளை சந்திக்க, என் குறைச்சலை நீக்க முன் வந்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக் கொள்கிறேன். தேவசமாதானம் உங்களிடத்தில் பெருகுவதாக ஆமென்!

## தேவாதி தேவனுக்கு நன்றிப் பலி

கர்த்தர் எனக்கு செய்த உபகாரங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்த 20.08.2006 அன்று மாலை சகோ. தேவநேசன், சகோ. அந்தோணி ஜோசப், சகோ. தாமஸ் ஜெயசீலன் என் இல்லத்திற்கு வந்து என் இல்லத்தில் பிரதி ஞாயிறு மாலை நடக்கும் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். நாங்கள் அனைவருமாக தேவனுக்கு அவருடைய நாமத்தை துதிக்கும் எங்கள் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை செலுத்தினோம். மேலும் கர்த்தருடைய இராப்போஜனபந்தியையும், கால்களைக்கழுவும் சடங்கையும் ஆசரித்தோம். ஐக்கியம் எங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது.

## 11-ன் இரகசியம் தான் என்ன?

1. எனக்கு நேரிட்ட முதல் மாரடைப்பு — நாள். 11. 11. 2001
2. சென்னையில் நான் வசித்த முதல் வீடு, திருமால் நகர் — எண். 11
3. சென்னையில் நான் வசித்த இரண்டாவது வீடு, முத்துக்குமரன் நகர் — எண். 11
4. சென்னையில் நான் வசித்து வரும் இன்றைய மூன்றாவது வீடு, திருமால் நகர் விரிவு II — எண். 11
5. எனக்கு நேரிட்ட இரண்டாவது மாரடைப்பு — நாள். 11. 06. 2006
6. ராஜவின் வழக்கு நிமித்தமாக பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்ட் விஷயமாக போலீஸ் எனது இல்லம் வந்தது — நாள். 11. 07. 2006
7. நான் ஆஞ்ஜியோகிராம் பரிசோதனைக்கு அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது — நாள். 11. 08. 2006

எதிர்பாராத விதமாக நடக்கும் சம்பவங்களில் என்னை தொடர்ந்து வரும் இந்த எண். 11 ன் இரகசியம் தான் என்ன?

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்திருக்க வேண்டுமென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் புத்தி சொல்கிறேன்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதரர்கள்:

1. சகோ. அலெக்சாந்தர் சாமுவேல்
2. சகோ. சாமுவேல் தங்கமணி
3. சகோ. ஐசக் அருமைநாயகம்
4. சகோ. காபிரியேல் பக்தசிங்
5. சகோ. இராயப்பன்
6. சகோ. மோசஸ் பாபு
7. சகோ. மேத்யூ கண்ணையன்
8. சகோ. டேனியல் ராஜ்
9. சகோ. அந்தோணி ராஜ்
10. சகோ. பெர்னார்ட் சாலமோன்

1. உங்கள் அனைவருக்கும், உங்கள் சபை விசுவாசிகள் அனைவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள்.

2. 27.08.2006 ஞாயிறு அன்று மதியம் தேவன் என் ஆவியை ஏவி, சபை பக்திவிருத்திக்காக என் உள்ளத்தில் உண்டாக்கின ஒரு எண்ணத்தின் பிரதிபலிப்பே இந்த அன்பின் தொனி மற்றும் எச்சரிப்பின் சத்தம். இதன் நோக்கம் உங்களில் யாரையாவது குற்றப்படுத்தவோ அல்லது வேறு ஒருவரை புகழ்ந்து எழுத அல்ல, மாறாக இது உங்கள் ஆத்தும நன்மைக்காகவே. ஆனால் நீங்கள் விசுவாசிப்பீர்களோ அல்லது விசுவாசிக்கமாட்டீர்களோ என்பது எனக்குத் தெரியாது. அது எவ்வாறாயினும், நான் அதை எழுதியே ஆக வேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்னுடைய பேனாவை பிடித்து எழுத வைக்கிறார், பாருங்கள்.

3. சகோதரர்களே, முன்நாட்களில் நீங்கள் ஒரே சபையின் கீழிருந்தீர்கள். காலப்போக்கில் அந்த சபையில் இருந்து நீங்கள் உங்கள் இச்சைகளின்படி பிரிந்து, பிரிந்து உங்களை வேறுபிரித்து, பிரித்து உங்களுக்கென்று சிலரை ஆதாயப்படுத்தி, உங்கள் குடும்பத்தினரை மட்டும் கொண்டு, உங்கள் உறவினர்கள் சிலரைக்கொண்டு, உங்களுடன் பணி செய்பவர்களைக் கொண்டு உங்களை நீங்கள் பாஸ்டர்களாக்கி தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு ஊழியம் செய்து வருகிறீர்கள். இது தேவனுடைய வழிநடத்துதல் என நினைக்கிறீர்களா? உங்களுடைய செயல்களெல்லாம் கர்த்தருடைய பார்வையில் செம்மையானது என்று நினைக்கிறீர்களா? ஒரு மந்தையை இன்று பத்து மந்தைகளாக்கி, நீங்கள் இதுவரை சாதித்தது தான் என்ன?. நீங்கள் உங்களுக்கு ஒரு பாஸ்டர் பதவியை தக்க வைத்துக்கொண்டீர்கள். அது தான் உங்கள் சாதனை. உங்கள் செயல்பாடுகளை சிந்தித்துப் பாருங்கள், சீர்தூக்கிப்பாருங்கள். நான் உங்கள் அனைவரையும் மிகவும் அதிகமாக, நீங்கள் என்னை நேசிப்பதைவிட அதிகமாக நேசிக்கிறேன். நீங்கள் கெட்டுப்போவது தேவனுடைய சித்தம் அல்ல. ஆதலால் உங்கள் உள்ளான மனிதனின் நலத்திற்காகவே இதை நான் எழுதுகிறேன். ஆனால் நான் எழுதுகிறதை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாது, உதாசினப்படுத்துவது உங்கள் சுயாதீனம்.

4. பாருங்கள், உங்களில் பலர் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்து வருகிறீர்கள். தேவனுக்கும், உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஆதலால் உங்கள் ஊழிய அழைப்பு தேவ சித்தத்திற்கு புறம்பானது. உங்களை நீங்களே ஒரு கை விரல்கள் எண்ணிக்கை உள்ள நபர்களை கொண்டு பாஸ்டர்கள் ஆக்கிக்கொண்டீர்கள். அது தான் உண்மை. இதுவரை நீங்கள் மந்தைக்கு மாதிரியற்று இறுமாப்பாய் ஆளுகை செய்தது போதும். உங்கள் ஊழிய அழைப்பை தேவன் உறுதிப்படுத்தவில்லை. அது முற்றிலும் உண்மை. . இருவகையான ஆவி மாத்திரமே உண்டு. ஒன்று பரிசுத்த ஆவி, மற்றொன்று பிசாசின் ஆவி, ஒரே நேரத்தில் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஒன்று தேவனுக்கு உங்களை முற்றிலுமாக அர்பணிக்க வேண்டும். அல்லது பிசாசுக்கு உங்களை முற்றிலுமாக உங்களை அர்பணிக்க வேண்டும். இரு ஆவிகளுக்கும் உங்களை முற்றிலுமாக ஒரே நேரத்தில் அர்ப்பணிக்கமுடியாது, கூடாது. நீங்களோ இரு ஆவிகளுக்கும் நாங்கள் ஊழியம் செய்கிறோம் என்கிறீர்கள். பிசாசு நிஜமானவன் அல்ல. அவன் வஞ்சிக்கிறவன். நீங்கள் சரியென்று பிசாசு உங்களை நினைக்கச் செய்கிறான். நீங்கள் தேவனுடைய வார்த்தையுடன் இணங்காமல் போனால் நிச்சயமாக அது பிசாசின் ஆவியே. தேவனுடைய வார்த்தையுடன் இணங்க நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் உணர்ச்சியின் அடிப்படையில் உங்கள் காரியங்களை நடப்பித்து வருகிறீர்கள். என்னை பொறுத்த அளவில், நம்முடைய ஒவ்வொரு செயலும் வேதாகமத்திலிருந்தே வரவேண்டும். அது தேவனுடைய வார்த்தையாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் அது உண்மையென்று நாம் அறிந்து கொள்ள முடியும்.

5. மேலும் உங்களில் சிலர் சபையில் அடிக்கடி உபதேசங்களை மாற்றி, மாற்றி மக்களை குழப்பத்திற்குள்ளாக்கி வருகிறீர்கள். தேவனால் ஏற்படுத்தப்பட்டவன், தேவனால் போதிக்கப்பட்டிருப்பான். ஆதலால் அவன் ஊழியத்தின் உபதேசங்களில் மாற்றங்கள் இருக்காது. ஆனால் உங்கள் ஊழியத்தில் மாற்றங்கள் அடிக்கடி ஏன்? நீங்கள் தேவனால் ஊழியத்திற்கென அழைக்கப்படவில்லை, ஆதலால் தேவனால் போதிக்கப்படவும் இல்லை. தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டிய நீங்கள், மனுஷர்களுடைய வாக்கியங்களின்படி போதித்து வருகிறீர்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களுடைய உபதேசங்களை பின்பற்றுகிறீர்கள். ஏனென்றால் அவர்கள் உங்களுக்கு உதவிகள் செய்கிறார்கள். ஆதலால் உங்கள் சபைகளில் போதனைகளை கொண்டு அடிக்கடி குழப்பங்கள்.

6. உங்களில் சிலர் வீடுகளில் குடும்ப காரியங்கள் சாட்சியாக இல்லை. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால். தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?

7. இன்று நான் காண்பது என்ன? அன்று ஒன்றாக காணப்பட்ட சபை, இன்று பத்தாக பிரிந்து காணப்படுகிறது. இதனால் உங்களைக் கொண்டு தேவனுடைய நாமமானது பல இடங்களில் தூஷிக்கப்பட்டு வருகிறது. உங்களில்

அநேகர் இன்றும் ஸ்தாபன சபைகளோடு தொடர்பு வைத்துள்ளீர்கள். ஸ்தாபன சபைகளின் ஒத்தாசைக்காக, உதவிகளுக்காக அவர்களை தேடி, நாடி அலைகிறீர்கள். உங்களால், உங்களை சார்ந்துள்ளவர்கள் எந்த விதத்திலும் பக்திவிருத்தி அடைந்தது போல் இல்லை. நீங்கள் உங்களை சார்ந்துள்ளவர்களைக் கொண்டு உங்கள் காலச்சக்கரத்தை உருளவைத்துக் கொண்டு வருகிறீர்கள்.

8. ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையானவர்களே, நீங்கள் சபையில் உங்கள் ஸ்தானத்தை, பதவியை, உத்தியோகத்தை விட்டு விலகுங்கள். தாம்பரம் தொடங்கி பல்லாவரம் வரை உள்ள பகுதிகளில் இன்றைய விசுவாசிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டால் ஒரே ஒரு சபை போதுமானது. அதுவே தேவனுக்கும் பிரீதியாக இருக்கும். ஒரே பகுதியில் 10 இடங்களில் 200 பேர்கள் கூடுவதைவிட ஒரே ஒரு இடத்தில் 200 பேர் கூடி தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பாஸ்டரால் வழி நடத்தப்பட்டு வருவீர்களானால், அதுவே ஆரோக்கியமான ஒன்றாக இருக்கும்.

9. ஒன்றுக்கொன்று மிக்க அருகாமையில் உள்ள தாம்பரம், தாம்பரம் சானடோரியம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர் பகுதிகளில் உள்ள நீங்கள் உங்கள் சபைகளை கலைத்துவிட்டு பொதுவான ஒரு இடத்தை தேடி அங்கு தேவனால் அழைக்கப்பட்ட மனிதனின் மேய்ச்சலின் கீழ் வந்தடைந்து, வழிநடத்தப்படுவீர்களானால் அது உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாக இருக்கும். நீங்களும் பலவிதமான போதனைகளில் சிக்குண்டு சிதறிப்போகாமல் ஒரே மந்தையின் கீழ் நல்ல மேய்ச்சலைக் கண்டடைவீர்கள். இன்னும் அநேக ஆடுகளை உங்கள் மந்தையில் சேர்க்கவும் முடியும். ஆவிக்குரிய வரங்களை உங்கள் மத்தியில் காணவும் முடியும்.

10. சகோ.அந்தோணிதாஸ், நான் கடந்த பல ஆண்டுகளாக நிதானித்துப்பார்த்து வந்த அளவில் அநேகரை பார்க்கிலும் உண்மையுள்ள, தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிற, தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தியை நன்கு அறிந்துள்ள தேவனுடைய மனுஷனாகக் காணப்படுகிறார். இதுவரை போதனைகளில் கலப்படம் எதுவுமின்றி அனைத்தையும் நிதானித்துப்பார்த்து நலமானதைப்பற்றிக் கொண்டு வருகிறார். அவருடைய குடும்பம் ஒரு தேவபக்தியுள்ள, அநேக ஆத்துமாக்களை மந்தையில் சேர்க்கும் ஒரு சாட்சியுள்ள குடும்பமாக காணப்படுகிறது. இவர் இந்நாட்களில் வேலை செய்து வந்தாலும், நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, ஒரே சபையாக ஒன்று கூடும் போது, அவரும் தன் வேலையை விட்டுவிட்டு, பாஸ்டர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தன் பணிகளை உண்மையும் உத்தமுமாக, தேவனுக்குப் பிரியமாக செய்வார் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். ஆக நீங்கள் அனைவரும் ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன் கீழ் கொண்டு வரப்படுகிறீர்கள். நீங்கள் பத்து பேரும் பாஸ்டர்கள் என்ற தோரனையை விட்டு இறங்குங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி உங்களை காத்துக்கொள்ளுங்கள். சகோ.அந்தோணிதாஸ்க்கு ஆதரவாக இருந்து, ஒத்தாசையாக இருந்து சபையை பக்திவிருத்தி அடையச்செய்து, அதை கர்த்தருடைய வருகைக்கென்று ஆயத்தப்படுத்துங்கள். நீங்களும் இந்நாட்களில் அநேகருக்கு இடறலற்றவர்களாயிருப்பீர்கள்.

11. 03.09.20006 அன்று காலை 8 மணியளவில் ஒரு சகோதரன் எனக்கு போன் செய்து சகோ.அந்தோனிதாஸ் மற்றும் சகோ. ரூபன் மாணிக்கராஜ் உங்களுக்கு தாராளமாக, கை நிறைய பணம் கொடுத்து உதவி செய்கிறார்கள். ஆதலால் நீங்கள் அவர்கள் குடும்பத்தை குறித்து எதுவும் என்றும் எழுதுவதில்லை. பாஸ்டர். ஐசக் வசந்தக்குமார் மற்றும் பாஸ்டர். பால்சங்கரன் உங்களுக்கு பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆதலால் அவர்களை பற்றி தூற்றி எழுதி வருகிறீர்கள். நான் கஷ்டப்படுகிறவன். உங்களுக்கு பணம் கொடுத்து உதவ முடியாது. ஆதலால் **என்னை இழிச்சவாயன்** என்று நினைத்து என்னை குறித்து அடிக்கடி எழுதி வருகிறீர்கள் என்று தான் என்ன பேசுகிறோம் என்று அறியாது, சுயநினைவின்றி சரவெடி போன்று வெடித்துத்தள்ளினார். இப்படியாக காரணமில்லாமல் என்னை தூற்றுவதே பல்லாவரம், பம்மல், பொழிச்சலூர் பகுதிகளில் சிலரது பணியாக இருந்து வருகிறது. இவர் என்னைக்குறித்து கூறிய குற்றச்சாட்டுகள் எந்த அளவிற்கு உண்மையானது என்பது நீங்களே சம்பந்தப்பட்ட சகோதரர்களிடம் கேட்டு அறிந்துக்கொள்ளலாம். முடிவாக சகோ. டேனியல் கிறிஸ்டியான் ஊழியமும் உங்கள் ஊழியமும் பக்கத்திலா இருக்கிறது? அவரது ஊழியம் தான் ஊழியம், மேன்மையான ஊழியம் என புகழ்ந்துபாடி போனை கீழே வைத்தார். இவர் என்னைப்பற்றி இந்த அளவுக்கு தூற்ற நான் இவருக்கு செய்த துரோகம் தான் என்ன? நான் இவர் என்னிடம் கூறியதை கடந்த செய்தித்தொகுப்பில் எழுதியிருக்க கூடாதாம். இவர் என்னிடம் கூறியதை நான் எழுதியது தவறு என்கிறார். அப்படியானால் சகோதரனே நீங்கள் என்னிடம் கூறியது தவறா என்றால் அல்ல தான் கூறியது உண்மை தான் என்கிறார். அப்படியானால் நான் உண்மையைத்தானே எழுதியுள்ளேன் என்றால், நீங்கள் நான் சொன்னதை எழுதியிருக்ககூடாது என்கிறார். அவருடைய வாதம் இப்படியாக இருந்தது.

12. இப்பொழுதே எனக்கு இந்த வசைப்பாட்டு என்றால் இந்த செய்தித்தொகுப்பு கிடைத்தப்பின் இன்னும் எவ்வளவு என்னைக் குறித்து புலம்பல் பாடுவார்களோ தெரியவில்லை. ஆனால் கர்த்தர் ஒவ்வொருவனுடைய உள்ளத்தின் ஆழங்களை ஆராய்ந்து அறிகிறவராயிருக்கிறார். அவர் நீதியோடு நியாயம் செய்வார். அவர் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே இது யாரையும் புகழ்ந்து எழுத அல்ல, மற்றும் யாரையும் குற்றப்படுத்த அல்ல. மாறாக சபை பக்திவிருத்திக்காக என் தேவன் என் உள்ளத்தில் வைத்த பாரத்தை எழுதியுள்ளளேன்.

13. என்னை ஆதரிக்க எனக்கென்று ஒரு சபை இல்லாதது குறித்து நான் கவலைப்படவில்லை. நான் பிரசங்கிக்க எனக்கென்று ஒரு பிரசங்கபீடம் இல்லாதது குறித்து மனப்பாரம் எனது உள்ளத்தில் முற்றிலுமாக இல்லை. ஆனால் இல்லத்தில் இருந்து கொண்டே கள்ளகபடமுள்ள வேலையாட்களை கண்டித்து, விசுவாசிகளை எச்சரிக்கையாக இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள் என எழுதி, எழுதி, அவர்கள் மோசம் போகாதபடிக்கு அவர்களுக்கு ஒரு ஜாமக்காரனாக இருந்து வருகிறேன். அதுவும் உண்மைதான். தவறான, மாயையான போதகங்கள் சபைக்குள் நுழையும்போது அப்படிப்பட்ட போதகங்களை சுட்டிக்காட்டி தேவனுடைய சபை உஷாராக இருக்கும்படி எச்சரிப்பின் தொனி கொடுத்துக்கொண்டேயிருக்கிறேன். தேவனுடைய வித்து என்னுடைய ஊழியத்தை அடையாளம் கண்டுகொண்டு நிச்சயமாக அவர்கள் தங்கள் வழிகளை திருத்திக்கொள்வார்கள்.

14. சமீபகாலத்தில் எனக்கு பிரசங்கிக்க பிரசங்கபீடம் கிடைத்தது. ஐக்கியத்திற்கு ஒரு சபை கிடைத்தது ஆனால் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு சாட்சியாக ஜீவிக்க வேண்டிய மேய்ப்பனே தன் கிரியைகளில் விசுவாசிகளுக்கு இடறலாக இருக்கும் போது, வார்த்தையைக் கேட்டு அல்லேலூயா! ஸ்தோத்திரம்! என ஆர்ப்பரித்துவிட்டு, கிரியை வரும்போது சபை வார்த்தையை மறுதலிக்குமானால் எனக்கு அந்த சபை பிரசங்கபீடம்

ஏன்? சபை ஐக்கியம் ஏன்? தேவையில்லை என ஒதுங்கிவிட்டேன். எனக்கு அப்படிபட்ட சபையும், அதன் ஐக்கியமும் தேவையில்லை. நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு அவையவமாக இருந்தால், அது மட்டுமே எனக்குப் போதும். அந்த சபை சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. அது ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் உள்ளது. அதிலே என்னுடைய ஊழியமும், ஐக்கியமும். அது எனக்குப் போதும்.

**15.** கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக இருந்த யோவான்ஸ்நானன், எலியாவின் ஆவியை உடையவன். சபைகள் அனைத்திலும் பிரஷ்டம் செய்யப்பட்டான். பிரசங்கம் செய்ய அவனுக்கு ஒரு பீடம் இல்லை. ஆனால் அவன் யோர்தானின் கறையில் நின்றுக்கொண்டு விரியன் பாம்பு குட்டிகளே என ஜனங்களை அழைத்து, மனதிரும்புங்கள் என அறை கூவினான். நானும் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு, சபை எடுத்துக்கொள்ளபடுதலுக்கு முன்பாக, லோக்கல் சபைகளில் ஐக்கியம் இல்லாதவனாய், பிரசங்கபீடம் இல்லாதவனாய், சபைகளையும், ஜனங்களையும், கள்ள உபதேசங்களையும் எனது நிருபங்களின் வாயிலாக, செய்தித்தொகுப்புகளின் வாயிலாக எச்சரித்து வருகிறேன். அதை வாசித்து, கேட்டு, அதன்படி தங்களை காத்துக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். சபைகள் என்னை ஏற்றுக்கொள்வது இல்லை. ஏன்? சபையானது ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியினால் துன்புறுகிறது.

**16.** ஆதலால் என்னை என் வயோதிப காலத்தில் நான்கு சுவற்றிற்குள் இருந்து ஊழியம் செய்கிறவனே என்று ஏளனமாக பேசும் நபர்களுக்காக பரிதாபப்படுகிறேன். உங்கள் வயதில் நான் செய்த ஊழியத்தில் நீங்கள் பத்து சதவீதம் கூட செய்து கொண்டிருக்கவில்லை என்பதை உங்களுக்கு கூறி நீங்கள் மனந்திரும்புங்கள் என்று புத்திமதி கூறுகிறேன். என் வாலிபப்பிராயத்தில் யாரையும் சாராது, ஒரு தனிப்பட்ட மனிதனாக, தேவனுடைய இராஜ்யத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தின் பேரில் நான் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம், மகாராஷ்டிரா, பீகார், மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு சென்று ஊழியம் செய்து வந்திருக்கிறேன். The Message of the Hour Outreach என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் அவ்வப்போது செய்தித்துணுக்குகள் எழுதி இந்தியாவின் வடமாநிலங்கள், மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பி விசுவாசிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை கொண்டுவந்தேன். பல வெளிநாடு சகோதரர்களுடன் தொடர்பு வைத்திருந்தேன். சிறு தொழிலின் வாயிலாக அயராது உழைத்தேன். ஊழியம் செய்தேன். குடும்பப்பாரத்தையும், ஊழியப்பாரத்தையும் சகித்தேன். அனைத்திலும் வெற்றியையே கிறிஸ்துவுக்குள் எப்போதும் கண்டேன். அல்லேலூயா! நீங்கள் என்னுடைய அந்நாட்களின் பருவத்தில் தமிழ்நாட்டின் ஒரு மூலையில் இருந்துக்கொண்டு, அதுவும் ஆறு நாட்கள் வயிற்றுப்பிழைப்பிற்கு பணி, வாரத்தில் ஒருநாள் தேவனுடைய சபையின் பக்திவிருத்திக்காக ஊழியம் என ஒரு ஊழியத்தை செய்துக்கொண்டு என்னை நோக்கி நான்கு சுவர்களுக்குள் நீ செய்யும் ஊழியம், ஒரு ஊழியமா? என்று கேட்கும் அளவுக்கு உங்களுக்கு மரியாதை தான் என்ன? ஆனாலும் சகோதரர்களே நான் உங்களை நேசிக்கிறேன். ஆதலால் உங்களை சில வேளைகளில் கடிந்துக்கொள்கிறேன். எதற்காக? உங்கள் நன்மைக்காகவே, பத்திவிருத்திக்காகவே! அதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.

**17.** இந்நாட்களில் சகோ. மேத்யூ கண்ணையன் அன்பையும் ருசிப்பார்க்க கர்த்தர் கிருபை செய்தார். என் மகன்கள் இருவருக்கும் ஷூக்கள் வாங்க வேண்டியதிருந்தது. இதுவரை நான் வாங்கிய அனைத்தும், நான் கொடுத்த விலைக்கு உழைப்பதில்லை. ஆதலால் சகோ. அந்தோணி ஜோசப்பிடம் எனக்கு தரமான இரு ஜோடி ஷூக்கள் வாங்கித்தர கேட்டுக்கொண்டேன். அவர் அது குறித்து சகோ. மேத்யூ கண்ணையனிடம் கூறினார். ஏனென்றால் அவர் ஒரு ஷூ உற்பத்தி செய்யும் கம்பெனியில் பணிபுரிகிறார். ஆக, அவர் எனக்கு இரு ஜோடி ஷூக்கள் வாங்கிக்கொடுத்தார். அதில் ஒரு ஜோடி ஷூவை நான் **4/5** முறைகள் மாற்ற வேண்டியதிருந்தது. அனைத்து வேளைகளிலும் சகோ. மேத்யூ கண்ணையன் தன் பணிகளை ஒதுக்கி பலமுறைகள் அலைந்து எனக்காக கஷ்டப்பட வேண்டியதிருந்தது. இந்த உதவியின் வேளைகளில் அவருடைய பொறுமை, ஒரு சகோதரனுக்காக அவர் தன் உள்ளத்தில் வைத்திருக்கும் அன்பை என்னால் ருசிப்பார்க்க முடிந்தது. கர்த்தருடைய சம்பூரண ஆசீர்வாதம் சகோதரனுக்கு சதாகாலங்களிலும் உண்டாவதாக.

**18.** தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் புத்தியும், எச்சரிப்பும் சொல்லுவதை ஆரோக்கியமான வார்த்தையாக ஏற்றுக்கொள்ளுங்கள். இதோ ஜீவனையும், மரணத்தையும்; ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உங்களுக்கு முன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவன் என்ற அழைப்பின் பேரில் வைக்கிறேன். நீங்கள் எதை தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களோ, அது உங்கள் சுயாதீனம். மேலும் நான் எழுதிய காரியத்தைக் குறித்து அதாவது தாம்பரம் தொடங்கி பல்லாவரம் வரை உள்ள பகுதிகளில் உதித்த சூரியன், தற்பொழுது மறைந்துக்கிடக்கிறது. அது மீண்டும் தான் உதித்த இடத்திற்கே காலதாமதம் இல்லாமல் திரும்ப; என்னைப் பரியாசம் பண்ணி, என்னுடைய வார்த்தையை அசட்டை செய்யாது, உங்கள் கழுத்தை அழுத்தமாக்கி, இருதயத்தை கடினப்படுத்தாது என் நல்ல ஆலோசனைகளை அபத்தமாக்குவதற்கு சாத்தானுக்கு இடம் கொடுக்காமல் உடனே சிந்தித்து செயல்படுங்கள். இது சாத்தியமா? என்று சிலர் ஏளனமாகப் பேசலாம். ஆனால் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களால் பிரிந்து, பிரிந்து செல்லமுடியுமானால், உங்களால் ஒன்று சேரவும் முடியும். எப்பொழுது? தேவனுடைய ஆவி உங்களிடத்தில் வாசம் பண்ணும் போது. நீங்கள் மறுபடியும் பிறந்து, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதியமனுஷனை தரித்துக்கொள்ளும் போது. ஒற்றுமை என்பது தேவனிடத்திலிருந்து வருகிறது. அது தேவனுடைய வல்லமையினால் உண்டாகிறது. உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு குற்ற உணர்வு ஏற்பட்டு, ஒரு வித மாற்றம் ஏற்பட்டாலொழிய இந்த காரியம் சாத்தியமாகாது. அதுதான் உண்மை. இது நீங்கள் சிந்திக்க வேண்டிய காலமாயும், செயல்பட வேண்டிய நேரமாயுமிருக்கிறது. ஏனென்றால் கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது.

**19.** சகல சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக. ஆமென்!

செப்டம்பர் – அக்டோபர், 2006

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**